வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P.1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ஈழநாடு






Email : news@eelanadu.lk | மலர் : 05 | 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 231 | பக்கங்கள் : 16


# பிரபாகரனின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது சந்தேகமே!

## இந்தியா ருடேயின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ராஜ் செங்கப்பா கருத்து




**கொழும்பு,ஓக. 18**

**விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை முதன்முதலில் படம் பிடித்தது தான் என இந்தியா டுடே குழுமத்தின் ஆசிரியபீட இயக்குநர் ராஜ் செங்கப்பா கொழும்பில் தெரிவித்துள்ளார்.**

**பிரபாகரனின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதில் மர்மங்கள், சந்தேகங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

இலங்கை இந்திய ஊடக நட்புறவு சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கைக்கு 15 வருடங்களின் பின்னர் மீண்டும் வந்துள்ளேன். இறுதியாக 2009ம் ஆண்டு இலங்கைக்கு வந்தேன். அந்த ஆண்டு இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக ஆண்டு.

தற்போது தேர்தலை எதிர்நோக்கியுள்ள இலங்கை வரலாற்றின் முக்கியமான கட்டத்தில் உள்ளது.

இந்தியாவிற்கு இந்த வருட தேர்தல் எவ்வாறு முக்கியமானதாக அமைந்ததோ அதேபோன்று இலங்கைக்கும் இந்த வருட தேர்தல் 15

# ஒரே இரவில் நடந்த கொடுக்கல் வாங்கல்

### அதனால்தான் வேலுகுமார் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

*கொழும்பு, ஓக. 18*

ஒரே இரவில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் காரணமாகவே பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்திருக்கக்கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹமான் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், வேலுகுமார் எம்.பி ஐக்கிய மக்கள் 15

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

*கொழும்பு, ஓக. 18*

உயிர் அச்சுறுத்தல் உள்ள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும், மதிப்பீட்டின் பின்னர் பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உயிர் அச்சுறுத்தல் உள்ள வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் 15

# தேர்தல் பிரசாரங்களுக்காக 3 ஆயிரம் கோடி ரூபா செலவு

*கொழும்பு, ஓக. 18*

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான நான்கு கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களுக்காக சுமார் 3000 கோடி ரூபாயை விட அதிகமாக செலவிடப்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிலவும் பிரசார தேவைகள், பிரசார விதிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக ஒரு வேட்பாளருக்காக அல்லது ஒரு கட்சிக்காக 7 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள 15

# அரசியல் தீர்வுக்கான ஆரம்பமாக 13 ஆவது திருத்தத்தை ஏற்கிறோம்!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

*கொழும்பு, ஓக. 18*

வடக்கு, கிழக்கு பிரச்னைக்கான அரசியல் தீர்வின் ஓர் ஆரம்பமாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கின்றது என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் உள்ள விடயமாகும், அது முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது 15

# அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார் வாசுதேவ

*கொழும்பு, ஓக. 18*

செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகுவதற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முன்னாள் தலைவரும், இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தீர்மானித்துள்ளார். 15

# இனப்பிரச்னையை தீர்க்காமல் நாட்டை கட்டியெழுப்பமுடியாது!

### ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு

*கொழும்பு, ஓக. 18*

"இனப்பிரச்னை தீர்க்கப்படும்வரை இந்நாட்டை கட்டியெழுப்ப முடியாது." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்நாட்டில் இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டும், அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். இப்பிரச்னையை 15

# தனது 92 எம்.பிக்களை வெளியேற்றும் மொட்டு

*கொழும்பு, ஓக. 18*

பொதுஜன பெரமுனவில் இருந்து 92 பாராளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றுவதற்கு அந்தக் கட்சி செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப் 15

# நாமலுக்காக மேடைகளில் ஏற தீர்மானித்துள்ள மகிந்த

*கொழும்பு, ஓக. 18*

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்காக பிரதான பிரசார மேடைகளில் ஏறுவதற்கு கட்சி தலைவரான மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என தெரியவருகின்றது. 15

# தினேஸுக்கு ரணில் கொடுத்த பொறுப்பு!

*கொழும்பு, ஓக. 18*

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற பல்வேறு வியூகங்களை வகுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்புகளுடன் இணைக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் பொறுப்பை பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கு வழங்கியுள்ளதாக 15

# கட்சி மோதல்களை தவிர்த்து நாட்டை கட்டியெழுப்புவோம்

### 'இயலும் சிறிலங்கா' முதல் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

*கொழும்பு , ஓக. 18*

'இயலும் ஸ்ரீலங்கா' தேர்தல் மேடையானது நாட்டை பிரிக்கும் இடமல்ல. மாறாக அனைவரும் ஒன்றிணைவதற்கான மேடையென தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை 15



# சர்வமத தலைவர்களை யாழில் சந்தித்த ஜயவீர



யாழ்ப்பாணம், ஓக. 18

சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர நேற்றைதினம் யாழ்ப்பாணத்தில் சர்வமத தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

நல்லை ஆதீனம், நாக விகாரை, யாழ்ப்பாணம் ஆயர் இல்லம், ஐந்து சந்தி ஜூம்மா பள்ளிவாசல், நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கும் திலித் ஜயவீர சென்றார்.

இதன்போது, சர்வஜன அதிகாரத்தின் கட்சித் தலைவர்களான விமல் வீரவன்ஷ, உதய கம்மன்பில, கெவிந்து குமார துங்க, அநுராத ஜகம்பத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா நாட்களில் சிறீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்ட பத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5. 30 மணிவரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக் கிழமை இணுவையூர் ஞான ஏந்தல் மா. ந. பரமேஸ்வரன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

• • •

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் முன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமஸ்கிருதத்துறை இந்துக் கற்கைகள் பீடத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாத சர்மா தலைமையில், யாழ். போதனா மருத்துவமனை மனநல மருத்துவ நிபுணர் சுப்பிரமணியம் சிவசுதன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் திருமதி சிவகாமி உமாகாந்தன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் குமரேசன் பால சண்முகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கம்பர்மலை ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, கும்பவாழி வீரகத்தி பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, கற்பகப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, நவிண்டில் பெருஞ்சீமா ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, பரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை, அல்லையம்பதி சிவசுப்பிரமணி யர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வு களை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக பானுஜன் வசந்த பாலா வழங்கும் இசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெற வுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள் ளார். (எ)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

வடமராட்சி, ஒக். 17

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மத்திய சுகாதார அமைச்சினால் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் காணப்படும் அவசர தேவைகள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸிடம் எடுத்து கூறியதை அடுத்து மத்திய சுகாதார அமைச்சிடம் ஆளுநரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்கமைய, சுமார் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கான 500 கிலோ வாட்ஸ் வலுவுடைய மின்பிறப் பாக்கி பெற்றுக்கொடுக் கப்படவுள்ளது. அத்துடன் வைத்தியசாலை ஊழியர்க ளுக்கான விடுதி புனரமைப்பு மற்றும் உள்ளக நடைபாதை புனரமைப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-2)



# ரூ. ஒரு கோடியே 30 இலட்சம் பெறுமதியான மூன்று கஜ முத்துக்களுடன் மூவர் சிக்கினர்

புத்தளம், ஓக. 18

ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று கஜ முத்துக்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இலங்கை விமானப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பி லேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவனல்லை மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)



# மகா நாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதம் பெற்றார் அநுர

கொழும்பு, ஓக. 18

கண்டி அஸ்கிரிய மகா விகாரையின் சியம் நிக்காய அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கர் வரக்காகொட சிறீ ஞானரத்ன தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் பிரதிப் பதிவாளர், அஸ்கிரி மகா விகாரை பரிவேனாதிபதி நாரம்பனாவே ஆனந்த மகா நாயக்க தேரர் ஆகியோரை தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க நேற்று சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். (எ)

# எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் தற்போது எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணரான சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் மக்கள் தொகையில் 0.03 எய்ட்ஸ் நோயாளிகள் கண்டறியப்பட்டாலும், தற்போது அந்த எண்ணிக்கை பத்தில் ஒரு பங்காக அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது நாடு முழுவதும் சுமார் 3,500 எய்ட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் 50 குழந்தைகளும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சமீபத்திய தரவுகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

தற்போது கண்டறியப்பட்ட நோயாளிகளில் ஏறக்குறைய 81 சதவீதமானவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதாகவும், எதிர்காலத்தில் இந்தநோய் மேலும் பரவும் அபாயம் உள்ளதால் மக்கள் இது குறித்து விழிப் புணர்வுடன் செயற்படுவது அவசியம் எனவும் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ மேலும் கூறினார். (அ)

# மின்சார சபையில் மறுசீரமைப்பு தேவை

கொழும்பு, ஓக. 18

இலங்கை மின்சார சபையில் உள்ளக மறுசீரமைப்பு அவசியம் தேவை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் மின்சாரத் துறை தொடர்பில் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

மின்சாரத்துறையில் பல வேறுபட்ட குறைபாடுகள் நிலவுகின்றன. அதனை நிவர்த் திக்க வேண்டுமாயின் உள்ளக மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்மூலம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக இலங்கை மின்சார சபையை மாற்ற முடியும்- என்றார். (எ)

# வேட்பாளர் ஒருவருக்கு பெண் பிரச்னையாம்!

## கூடுதல் பாதுகாப்பு கோரினார்

கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதி வேட்பாளர்கள் 39 பேருக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையின் போது, அவர்களில் ஒருவர் பெண்கள் பிரச்னையை அடிப்படையாக கொண்டு கூடுதல் பாதுகாப்பை கோரியுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணையில் இது உறுதி செய்யப் பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஜனாதிபதி வேட்பாளர் தமக்கு கூடுதலான பாதுகாப்பை கோரிய போது, இவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா? என ஆராயும் போது பெண் பிரச்னை காரணமாகவே பாதுகாப்பு கோரியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர மற்றும் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கு விசேட பாதுகாப்பு வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதுதவிர, வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டுமா? என பரிசீலிக்கும் போது, பெண்கள் பிரச்னையை அடிப்படையாகக் கொண்ட வேட்பாளர் மட்டுமே, சிறப்பு பாதுகாப்பு கோரியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (எ)

# வாக்காளர்களை வாங்குவதற்கு யாருமே முயற்சிக்க வேண்டாம்

## வேட்பாளர்களுக்கு பவ்ரல் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 18

**வாக்காளர்களை பணம் கொடுத்து வாங்குவதற்கு முயற்சிக்க வேண்டாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் மூன்று வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் வேட்பாளராக போட்டியிட முடியாது என்று பவ்ரல் அமைப்பு எச்சரித்துள்ளது.**



தேர்தல் செலவு ஒழுங்கு படுத்தல் சட்டம் செயல்படுத் தப்படுவதால் ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் சட்ட திட்டங்களைப் பின்பற்றி கௌரவமான முறையில் பிர சார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என அந்த அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பா ளர் ரோஹண ஹெட்டியா ராச்சி தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பு வெள்ளிக் கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக் கல் செய்துள்ள வேட்பாளர்கள் எந்த வகையிலும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படாத வகை யில் தங்களின் பிரசார நடவ டிக்கைகளில் ஈடுபட வேண் டும். அதேபோன்று, சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் பிரசார நட வடிக்கைகளில் இருந்து தவிர்த்து கொள்ளுமாறும் வாக் காளர்களை பணத்துக்கு வாங்கு வதற்கு முயற்சிக்க வேண்டாம் எனவும் அனைத்து வேட்பாளர் களையும் கேட்டுக்கொள்கி றோம்.

மேலும், இந்தத் தேர்தலில் முதற்தடவையாக தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட் டம் அமுல்படுத்தப்பட்டிருக் கிறது. அதனால் வேட்பாளர் களின் செலவு வரையறுக்கப் படும் சட்டத்துக்கு அமைவாக வேட்பாளர்கள் தங்களின் தேர் தல் செலவுகளை மட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த சட்டத்தை மீறிச் செயல் படும் வேட்பாளர்களின் பதவி இல்லாமல் போகும் நிலை இருக்கிறது.

அதேநேரம் யாராவது ஒரு வேட்பாளர் தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை மீறியிருப்பது உறுதிப்படுத்தப் பட்டால் குறித்த வேட்பா ளருக்கு மூன்று வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் வேட் பாளராக போட்டியிட முடி யாத நிலை இருக்கிறது. அத னால் தேர்தல் சட்ட திட்டங் களை பின்பற்றி கௌரவமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு வேட்பாளர்கள் அனை வரையும் கேட்டுக்கொள்கி றோம் - என்றார்.(எ)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 513 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஒக. 18

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரை) 519 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங் களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 306 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப் பாட்டு முகாமைத்துவ நிலை யத்துக்கு 197 முறைப்பாடுக ளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகா மைத்துவ நிலையத்துக்கு வன் முறைச் சம்பவங்கள் தொடர் பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (எ)

# குடா கங்கையின் நீர்மட்டம் அதிகரிப்பு வெள்ளப் பெருக்கு அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 18

பலத்த மழையால் குடா கங்கையின் நீர்மட்டம் அதிக ரித்துள்ளதால் சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதன்படி, நேற்றுச் சனிக் கிழமை காலை 9 மணி முதல் சுமார் 48 மணி நேரத்துக்கு மூன்று பிரதேச செயலகங்க ளுக்கு வெள்ளப் பெருக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

குடா கங்கையின் ஆற்று நீர் மட்டத்தை ஆய்வு செய்த தையடுத்தே நீர்ப்பாசனத் திணைக்களத்தால் இந்த எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் புலத்சிங்கள, மதுராவளை மற்றும் பாலிந்த நுவர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக ளுக்கு உட்பட்ட குடா கங்கை மற்றும் மகுர கங்கையின் தாழ் வான பிரதேசங்கள் வெள் ளத்தில் மூழ்க வாய்ப்புள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின

கொழும்பு, ஒக. 18

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் கடும் வாகன நெரி சல் ஏற்பட்டுள்ளதாக பொலி ஸார் கூறினர்.

கொழும்பில் கடும் மழை பெய்து வருகின்றது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லி மீற்றருக் கும் அதிக மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வுகூறியுள்ளது.(எ)

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 18

நாட்டில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக களுத் துறை, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

நிலம் மற்றும் சுவர்களில் விரிசல்கள் ஏற்படுதல், மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சாய்தல், திடீரென நீரூற்றுகள் தோன் றல், சேற்று நீர் வெளியேறல் போன்ற அறிகுறிகள் தென்பட் டால் எச்சரிக்கையாக இருக்கு மாறு பொதுமக்கள் அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ மையத்தின் 117 என்ற இலக்கம் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையத்துக்கு தகவல் தெரி விக்குமாறும் கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளனர். (எ)

# ‘யுக்தி’யவில் 693 பேர் சிக்கினர்

கொழும்பு, ஒக. 18

நாடளாவிய ரீதியில் நேற் றுக்காலை 10 மணியுடன் நிறை வடைந்த கடந்த 24 மணித்தியா லத்துக்குள் மேற்கொள்ளப் பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற் றம் தொடர்பில் மேலும் 693 பேர் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் 681 ஆண்களும் 12 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர்களில்14 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ளதுடன், 03 பேர் புனர் வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 171 கிராம் 806 மில்லி கிராம் ஹெரோயின், 326 கிராம் 269 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 6,467 கிராம் 026 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட் டுள்ளன. (எ)

# குக்குலே கங்கை நீர்த்தேக்க வான் கதவுகள் நேற்று திறப்பு

களுத்துறை, ஒக. 18

களுத்துறை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரண மாக குக்குலே கங்கை நீர்த்தேக் கத்தின் வான் கதவுகள் நேற்றுச் சனிக்கிழமை காலை திறக்கப் பட்டுள்ளதாக பிரதேச செய லகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் புலத்சிங்கள பிர தேசத்தில் பல தாழ் நில பிர தேசங்கள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த நீர்த்தேக்கத்திலிருந்து 180 கன அடி நீர் திறந்துவிடப் பட்டுள்ளதால் அந்தப் பகுதி யின் அருகில் வசிக்கும் மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள் ளனர்.

இதேவேளை, வெள்ளம் சூழ்ந்துள்ளமையால் புலத்சிங் கள, பரகொடை, மொல்காவ ஆகிய வீதிகளில் போக்குவரத் துகள் தடைப்பட்டுள்ளதால் மாற்று வழிகளை பயன்படுத்து மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழை வீழ்ச்சி மேலும் அதிகரித்தால் நீர்த்தேக்கத்தின் அதிகளவான நீர் வெளியேற்றப் படும் என பிரதேச செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# 17 குடியிருப்புகள் முற்றாக தீக்கிரை

## 20 குடும்பங்கள் நிர்க்கதி

நுவரேலியா, ஒக. 18



நுவரேலியா, பூண்டு லோயா கீழ் பிரிவு தோட் டத்தில் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 17 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகின.

அதுமட்டுமின்றி குறித்த தீ விபத்தால் லயன் தொகுதியில் அமைந்தி ருந்த 20 வீடுகள் சேதம டைந்ததுடன் இந்த வீடு களில் குடியிருந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயல வர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இதனையடுத்து பூண்டுலோயா பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 2 மணித்தியாலயங்க ளுக்கு பிறகு தீ கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வரப்பட் டது.

எனினும், 17 வீடுகளில் இருந்த பெறுமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகின.

இந்த தீ விபத்தால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 20 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 20 குடும்பங்களை சேர்ந்த 70 பேர் தற்காலிகமாக தோட்டத்தின் ஆலய மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்ட றியப்படவில்லை. நுவரெலியா பொலிஸ் கைரேகை அடை யாளப்பிரிவினருடன் இணைந்து பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

# வாகன இறக்குமதி வரியை அதிகரிப்பதற்கு திட்டமா?

கொழும்பு, ஒக. 18

தனியார் தேவைகளுக்காக வாகனங்களை இறக்குமதி செய் தால், வாகன இறக்குமதி வரி யையும் அதிகரிக்க வேண்டியி ருக்கும் என உயர் மட்ட தக வல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டு மக்களின் வாழ்க் கைச் செலவை கருத்தில் கொண்டு வாகன இறக்குமதிக் கான வரிகளை வருடாந்தம் திருத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் அர சாங்கம் இணக்கம் தெரிவித் துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

கார்கள் இறக்குமதி செய்யப் பட்டால், வரிகள் அதிகரிக்கும் மற்றும் மதுபானத்துக்கு விதிக் கப்படும் கலால் வரி, வாகன இறக்குமதியிலும் விதிக்கப் படும், மேலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்க விகிதத்தின் காரணிகளுக்கு ஏற்ப இந்த வரி திருத்தப்படும். எனினும் அத்தியாவசிய வாக னங்களை மாத்திரம் முதலில் இறக்குமதி செய்வதில் அரசாங் கம் கவனம் செலுத்தியுள்ளது.

தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதால் வெளி நாட்டு கையிருப்பு பாதிக்கப் படாத வகையில் 1000இற்கும் குறைவான இயந்திர திறன் கொண்ட சிறிய அளவிலான வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்ட மிட்டுள்ளதாகவும் இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது. (எ)

# 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதையுடன் இருவர் கைது

## விசேட அதிரடி படையினர் அதிரடி



**கல்முனை, ஓக. 18**

**30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர். இதுவே அம்பாறை மாவட்ட வரலாற்றில் இது வரை மீட்கப்பட்ட அதிக ஐஸ் போதைப்பொருளாகும்.**

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கமைய நீண்ட நாட்களாக ஐஸ் போதைப்பொருட்களை விநியோகம் செய்து வந்த சந்தேக நபர்கள் கல்முனை மாநகரில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் வைத்து வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பகுதியில் இருந்து கல்முனைக்கு நீண்டகாலமாக குறித்த போதைப் பொருட்கள் கடத்திவரப்பட்டுள்ளதுடன் 36 வயது மற்றும் 49 வயதுடைய கல்முனை, அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஆடம்பர உல்லாச விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குறித்த போதைப் பொருட்கள் பொலித்தீன் பைகளில் உறையிடப்பட்டு மிக சூட்சுமமாக கடத்திவரப் பட்டுள்ள நிலையில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இந்த சந்தேக நபர்களையும் சான்றுப்பொருட்களையும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒப்படைக்கவுள்ளனர்.

விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் ஏ. எஸ். பி. குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார, அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர். ஏ. டி. சி. எஸ். ரத்நாயக்க தலை மையிலான அதிகாரிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத் திருந்தனர்.

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 3 சதவீத வாக்குகள் கூட நாமலுக்கு கிடைக்காது

## சொல்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஓக. 18

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆணை வழங்கிய 69 இலட்சம் மக்கள், ராஜபக்ஷக்கள் மீது கோபத்தில் உள்ளனர். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் 3 சதவீத வாக்குகளை பெறுவது கூட பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு சவாலானது என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சர்வ ஜன கட்சியின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை 39 பேர் போட்டியிடுகின்றனர். பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் சகாக்களாகவே ஒரு தரப்பினர் போட்டியிடுகிறார்கள். கட்டுப்பணம் வைப்பிலிடும் தொகை குறைவானதால் எந்தவித வரையறைகளும் இல்லாமல் பலர் போட்டியிடுகிறார்கள்.

பாராளுமன்றத் தேர்தலில் ஓர் ஆசனத்தை கூட கைப்பற்றாத அரசியல் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆகவே, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிடும் போது அதற்கான வரையறைகள் அரசமைப்பு ஊடாக விதிக்கப்பட வேண்டும். மறுபுறம் சுயேச்சை வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை ஒரு கோடியாக அதிகரிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் யார் முன்னிலையில் உள்ளார்கள் என்று குறிப்பிட முடியாது. ஏனெனில் 22 சதவீத வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை இதுவரை தீர்மானிக்கவில்லை. இவர்களை இலக்காகக் கொண்டு பிரசார பணிகளில் ஈடுபட்டுள்ளோம்.

கோட்டாவுக்கு கிடைத்த 69 இலட்ச மக்களாணை ராஜபக்ஷக்களின் குடும்ப சொத்தல்ல. சுபீட்சமான கொள்கையை செயல்படுத்துவதை விடுத்து கோட்டாபய, பஸில் - ஜூலி சங் கொள்கையை செயல்படுத்தினார்.இதனால் நாட்டு மக்கள் அவரை விரட்டியடித்தனர் - என்றார். (எ)

# மன்னாரில் இடியுடன் மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஓக. 18

மன்னார், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சிரேஷ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தென்படுகின்ற இடையூறின் காரணமாக நாட்டின் தென்மேற்குப் பிராந்தியத்தில் மழையுடனான வானிலை தொடரக்கூடும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகிறது.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மன்னார் தொடக்கம் புத்தளம், கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# காங்கேசனில் 60 கிலோ மீற்றர் வேகத்தில் அடிக்கடி காற்றுவீசும்

யாழ்ப்பாணம், ஓக. 18

காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் ஊடாக புத்தளம் வரையான அத்துடன் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும் என்று வளிமண்டல திணைக்களம் தெரிவித்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அந்த வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# காலியில் அதிக மழை வீழ்ச்சி!

காலி, ஓக. 18

இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தென்படுகின்ற இடையூறு காரணமாக நாட்டின் தென்மேற்குப் பிராந்தியத்தில் மழையுடனான வானிலை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், நேற்று அதிகாலை ஒரு மணிவரையான காலப்பகுதிக்குள் காலி மாவட்டத்தில் நெலுவ பகுதியில் 191.5 மில்லி மீற்றர் அளவில் பலத்த மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தில் வலல்லாவிட்ட பகுதியில் 177 மில்லி மீற்றரும், ஹொரண பகுதியில் 120 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 116.5 மில்லி மீற்றரும், இரத்தின புரி மாவட்டத்தில் எஹலிய கொடை 116 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

# யானையை சுட்டுக்கொன்ற மூன்று பொலிஸார் கைது!

தம்புள்ளை, ஓக. 18

தம்புள்ளை - பக்கமூன பிரதான வீதியில் காட்டு யானையைச் சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பக்கமூன பொலிஸ் நிலையத்தை சேர்ந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். பக்கமூன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள், ஓட்டோவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காட்டு யானை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# முதலாளி தாக்கியதில் தொழிலாளி உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 18

கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றுக்கு அருகில் முதலாளியால் தாக்கப்பட்டு தொழிலாளி ஒருவர் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

விற்பனை நிலையத்தின் முதலாளிக்கும் கொலை செய்யப்பட்ட தொழிலாளிக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து, சந்தேக நபரான 42 வயதுடைய விற்பனை நிலையத்தின் முதலாளி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# மின் கசிவு காரணமாக கடை முற்றாக தீக்கிரை

மாத்தளை, ஓக. 18

மாத்தளையில் பொருளாதார மத்திய நிலையத்துக்கு முன்பாக உள்ள கடையில் வெள்ளிக்கிழமை இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

கார்ட்போர்ட் பெட்டிகள் மற்றும் வெவ்வேறு வகையான பைகள் விற்பனை செய்யப்படும் கடையிலேயே மின் கசிவு காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பரவிய தீயில் கடை முழுவதும் எரிந்து சேதமடைந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

தம்புள்ளை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தியதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.08.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர் அரசியலின் எதிர்காலம்?

தமிழ் தேசிய அரசியல் என்பது அடிப்படையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகள் எந்தளவுக்கு அரசியல் பிரதிநிதித்துவங்களை தக்கவைத்துக் கொள்கின்றன என்பதில்தான் தங்கியிருக்கின்றது. 2020 பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும் பின்னடைவுகளை சந்தித்தது. வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யாத கட்சிகள் குறிப்பிடத்தக்களவு வாக்குகளை பெற்றிருந்தன.

இது தெளிவான செய்தியொன்றை வெளிப்படுத்தியது. அதாவது, வடக்கு, கிழக்கில் மக்கள் பல்வேறு நிலையில் சிந்திக்கின்றனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ராஜபக்‌ஷவின் மொட்டுச் சின்னத்திலும் ஒரு தமிழர் வெற்றிபெற முடிந்தது. இது ஓர் எச்சரிக்கையை வழங்கியிருக்கின்றது. தொடர்ந்தும் தமிழ் மக்களை வடக்கு, கிழக்கு தழுவியதாக, தமிழ் தேசிய அரசியலில் தக்கவைக்க முடியுமா?

வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தொடர்ந்தும் வலுவான நிலையில் நிற்கக் கூடிய அரசியல் சூழல் படிப்படியாக பலவீனமடைந்திருக்கின்றது. இந்த சவாலை எதிர்கொள்ள முடிந்தால் மட்டுமே தமிழ் தேசிய அரசியல் நிலைக்கும். இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், தமிழ் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் மக்களின் வாக்குகளை முடிந்தவரையில் திரட்டுவதானது, தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் அனைவரதும் வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது அடிப்படையில் தமிழ் தேசிய கட்சிகளை வலுப்படுத்தும் முயற்சியாகவும் அர்த்தம் பெறுகின்றது. ஆனால், இந்தப் போக்கை இலங்கை தமிழ் அரசு கட்சியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இதுவரையில் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை தமிழ் அரசு கட்சி, இந்த அரசியல் யதார்த்தத்தை புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை - முயற்சிக்க வில்லை என்பதை விடவும், தனிநபர் சண்டைகளால் அக்கட்சி, சிதைந்து கொண்டிருக்கின்றது. ஆனால், தங்களின் கட்சி, சிதைந்து கொண்டிருக்கின்றது என்பதைக் கூட, அந்தக் கட்சியின் உறுப்பினர் களால் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதுதான் துரதிர்ஷ்டவசமானது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸை (முன்னணி) பொறுத்த வரையில் தமிழ் தேசியத்தின் காவலர்கள் போன்று, தங்களை காண்பித்துக் கொண்டிருப்பதை தவிர, தமிழ் தேசிய அரசியலை பாதுகாக்கும் எந்தவோர் ஆக்கபூர்வமான நகர்வுகள் எதனையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. உண்மையிலேயே முன்னணி என்னும் பெயரில் இருப்பவர்கள், தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வது உண்மையாயின், இப்போதும் காலம் கடந்துவிடவில்லை, அவர்கள், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுடன், தங்களை இணைத்துக் கொள்ளலாம் - ஆகக் குறைந்தது, தங்களின் கீழ்த்தரமான கருத்துக்களையாவது தவிர்க்கலாம். ஏனெனில் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, அதனை படிப்படியாக சிதைக்கும் வேலைகளையே முன்னணி செய்துவருகின்றது.

மொத்தத்தில் தமிழ் தேசிய அரசியல் குற்றுயிருடன் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அதற்கு புத்துயிரளிக்கக் கூடிய நிலையில் எந்தவொரு கட்சியும் வலுவுடன் இல்லை. இன்றைய நிலையில் தனிக்கட்சியாக எந்தவொரு கட்சியும் வலுவான நிலையில் இல்லை. ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சி வலுவான தோற்றத்தோடு இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமையும் மாறி வருகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால், தமிழ் தேசியத்தின் எதிர்காலம் என்பது பெரிய கேள்விக்குறியாகும்.

### நல்லூரான் திருவடி - 10

# பக்தனுக்கு பிட்டு கொடுத்த யோக சுவாமிகள்!

**பொன்னையா உபாத்தியாயர்**

ஒருநாள் பருத்தித்துறையில் ஒரு பணியின் நிமித்தம் நின்றபோது யோகரின் கொட்டிலுக்கு சென்றால் பிட்டுச் சாப்பிடலாம் என்ற எண்ணம் தோன்றியது. இதன் காரணமாக நான் சுவாமிகளின் கொழும்புத்துறை இல்லம் நோக்கிச் சென்றேன்.

அதிகாலை மூன்று மணியளவில் சுவாமிகளைச் சென்றடைந்தேன். சுவாமிகளின் அந்த குடில் இல்லத்தினுள் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. வீதியோரமாக இருந்த கோவில் கிணற்றில் கை,கால்களைக் கழுவிய பின்னர் சுவாமிகளின் குடிலுக்குள் சென்றேன். யோகர் தியானத்தில் அமர்ந்திருந்தார். நானும் அவர் முன்பாக தியானத்திலமர்ந்தேன். அச்சமயம் சுவாமிகளின் குடிலுக்கு வெளியே வயோதிபத் தாயார் ஒருவர், "சுவாமி பிட்டுக் கொண்டு வந்துள்ளேன்" என்று கூறக்கேட்டேன். அப்போது, "இந்த நேரத்தில் யார் உன்னை பிட்டுக் கொண்டுவரச்சொன்னது?" என்று சுவாமிகள் அந்தத் தாயாரிடம் கேட்டார்.




அப்போது அத்தாயார், "சுவாமி, நீங்கள் கனவில் தோன்றி, உடனே பிட்டுக் கொண்டுவா என்று கூறினீர்கள். ஆகையால்தான் நான் பிட்டு கொண்டுவந்தேன்" என்று கூறினார். அப்போது யோகர், "பிட்டு கேட்டது பொன்னையா. பொன்னையாவுக்கு பிட்டைக் கொடுங்கள்" என்று அத் தாயாரிடம் கூறினார். அச் சமயத்தில் எனது எண்ண அலைகள் சுவாமிகளின் மனதில் பதிந்து, பின்னர் அந்த எண்ண அலை மற்றுமோர் அடியவரின் மனதில் கனவாகத் தோன்றிய தெய்வீக அதிசயத்தைக் கண்டு வியந்தேன்

மற்றொரு சந்தர்ப்பத்தில் யோகரை ஒரு கடையருகில் சந்தித்தேன். கடையின் எதிர்ப்புறத்தில் ஒரு புதுமனை புகுவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. வீட்டுக்காரார் அங்குமிங்குமாக நடந்து திரிந்தார். ஆனால், யோகர் அந்த வீட்டுக்காரரை கண் கலங்கியவராகப் பார்த்து நின்றார். அப்போது வியப்போடு எனது கண்களும் கலங்க, சுவாமிகளை நோக்கி நின்றேன்.

அப்போது, "நாளைக்கு இதே நேரத்தில், இதே இடத்தில் சந்திப்போம், ஒரு புதினம் நடக்கும் பார்க்கலாம்" என்று யோகர் கூறினார்.

மறுநாள், யோகர் கூறியதுபோலவே அந்த வீட்டினருகே வந்து நின்றேன். சுவாமிகளும் அங்கு வந்தார். சற்று நேரத்தில் அப் புதுமனையிலிருந்து அவலக் குரல்கள் எழுந்தன. அவ் வீட்டுக்காரர் இறந்திருந்தார். எனவே அவரது உறவினர்கள் அழுது புரண்டு அழுதனர். அச்சமயம் அங்கு நின்ற யோகர் அழவில்லை. "நீர்க்குமிழி போன்றது வாழ்க்கை" என்று, சுவாமி மெல்லச் சிரித்தபடி கூறினார்.

யோகர் தம்மைத் தரிசிக்க வந்த அடியவர்களுக்கு விடை கொடுக்கும்போது சில வேளைகளில் அவர்கள் போகவிருக்கின்ற பக்கம் பற்றியோ அல்லது வீட்டுக்கா செல்கின்றீர்கள்? என்றோ கேட்பது ஒரு குறிப்பினையுடையதாக இருக்கும்.

அவ்வாறு யோகர் கேட்பது, அவரது பக்தர்களை இடையூறுகளிலிருந்து காப்பாற்றும் ஓர் அறிகுறியாகவே இருக்கும். சுவாமிகள் ஒருதடவை "பொன்னையா இந்த வழியால் போகாதே" என்று எச்சரித்தார். இருந்த போதிலும் சுவாமிகள் எதற்காக இப்படிக் கூறுகின்றார் என்று பரீட்சித்துப் பார்க்க ஆர்வம் கொண்டேன். எனவே, சுவாமிகள் போகவேண்டாம் என்று கூறிய வீதியூடாக சென்றேன். அப்போது அவ்வழி யில் பல தெரு நாய்கள் வழிப்போக்கர் ஒருவரை கலைத்துக் கலைத்து கடித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். கடிபட்ட வரும் இரத்தம் பெருக காட்சியளித்தார். எனவே, இது போன்ற அபாயம் எனக்கு ஏற்பட்டுவிடக் கூடாது எனக் கருதியே யோகர் என்னை அவ்வழியால் போகவேண் டாம் என்று முன் கூட்டியே எச்சரித்த அவரது அனுக்கிரஹத்தை நேரில் உணர்ந்து வியந்தேன்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**
(நாளையும் தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# சொல்லப் போனால்... இந்தச் சிலைகள் செய்த பாவம் என்ன?

எம். பாண்டியராஜன்

அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தாற்போல என்பது இங்கே பொருந்துமா தெரியவில்லை. எந்த நாட்டில் வன்முறை என்றாலும் சரி, ஆட்சிமாற்றக் கலவரம் என்றாலும் தேடிச் சென்று இந்த சிலைகளைத்தான் உடைக்கிறார்கள், அப்படியே நொறுங்கிவிழும் சிலைகளுடன் சேர்ந்து அவர்களுடைய முகங்களும் உலகம் முழுவதும் தெரிகின்றன.

இந்த வங்கதேசத்தை யார் வேண்டுமானாலும் ஆண்டுவிட்டுப் போகட்டும். ஹசீனா போய் யூனுஸ் வந்தால் என்ன? கலீதா வந்தால் என்ன? ஷேக் முஜிபுர் ரஹ்மான் சிலை என்ன செய்துவிடப் போகிறது? முஜிபுர் ரஹ்மான் இல்லாமல் வங்கதேசம் உருவாகியிருக்குமா? அல்லது நினைத்துத்தான் பார்த்திருக்க முடியுமா? அரை நூற்றாண்டாகிவிட்டதால் அடையாளங்கூடவா மறந்து போய்விடும்? ஹசீனாவின் அப்பா என்பதென்ன அவ்வளவு பெரிய குற்றமா?

வங்க மண்ணில் அப்போது நடந்ததையெல்லாம் யாராவது இந்தக் கலவரக்காரர்களுக்கு ஒருமுறை ரீவைண்ட் செய்து காட்ட வேண்டும். இவ்வளவு பெரிய சிலையை நொறுக்க எங்கிருந்துதான் இந்தப் பொருள்களை - ஏணி, கயறுகள்கூட - எல்லாம் திரட்டி வந்திருப்பார்களோ? கண் கண்ணாடியை உடைக்கத் தொடங்கி, கழுத்தில் கயறு கட்டி இழுத்துத் தள்ளி... சிலைதான் என்றாலும் முஜிபுர் ரஹ்மான் அங்கங்கள் ஒவ்வொன்றும் நொறுங்கிவிழும்போது மிகவும் வலியாகத்தான் இருக்கிறது, அதுவும் மீண்டும் மீண்டும் காட்டப்படும் அந்தக் காட்சிகள்.

அவதிப்பட்டுக் கிடந்த ஒரு நாட்டின் விடுதலைக்குக் காரணமான மனிதரின் மீது அப்படியென்ன காழ்ப்பு? வங்கதேச விடுதலையின்போது, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பேசியதை ஒருமுறை இவர்கள் கேட்டுப் பார்க்க வேண்டும்.

வங்கதேசத்தில் மட்டும்தானா சிலையை உடைக்கிறார்கள்? இது ஏதோ ஒட்டுமொத்தமாக மக்கள் மனதில்



உறைந்துகிடக்கும் நோய்தான் போல. நினைத்துப் பார்த்தால் எல்லா நாடுகளிலும் உடைத்திருக்கிறார்கள், உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அஹிம்சையைப் போதித்த புத்தர் என்ன செய்துவிடப் போகிறார்? ஆப்கானிஸ்தானிலும் சீனாவிலும் உடைத்துத் தள்ளினார்கள். புரட்சி செய்து உலகைப் புரட்டி இன்னொரு பக்கத்தைத் திறந்துகாட்டிய லெனின் சிலைகளை, கட்டுகள் தளர்ந்து தாராள அரசுகள் வந்ததும் சோவியத் ஒன்றியம் முழுவதும் குறிவைத்து நொறுக்கினார்கள், இழுத்துக் கீழே தள்ளினார்கள். சீனாவிலேயே மாவோ சிலையைத் தகர்த்தார்கள். சிலைகளை உடைப்பதில்தான் என்னே கூச்சல், என்னே உற்சாகம், என்னே மூர்க்கம்?

அடேயப்பா, எங்கேயோ உலகத்துக்குப் போயாச்சு, ஊருக்குள்ள என்ன நிலை? என்றால் கொஞ்சம் வெட்கப்படத்தான் வேண்டியிருக்கிறது. வெளிநாடுகளிலேயாவது கலவரங்கள், அரசியல் மாற்றங்களின்போதுதான் இந்த பிரமாண்டமான சிலைகளின் உடைப்புகள் நடக்கின்றன. இந்தியாவிலோ எதற்காகவென்றே தெரியாது, திடீர் திடீரென்று எங்கேயாவது, யாராவது ஆள் உயரச் சிலைகளை மட்டும் அல்ல, சின்னச் சின்ன சிலைகளைக்கூட உடைத்துவிடுகிறார்கள், மூளியாக்கி விடுகிறார்கள். அவ்வளவுதான், போராட்டம், வன்முறை, கல்வீச்சு, தீவைப்பு, 144, ஊரடங்கு. எவ்வளவோ பெரிய தலைவர்கள், அவர்களுக்குப் பின்னால் எத்தனையோ வரலாறு. ஆனால், அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஏதோவொரு சாதிக்காரர்கள் அவர்களைத் தூக்கிப் பிடிக்கப் போக, மற்றவர்கள் எல்லாம் கடப்பாரை, சுத்தியல் பிடிக்கிறார்கள்.

தலைவர்களுடைய கொள்கைகளைத்தான் காப்பாற்றவும் முடியவில்லை, பின்பற்றவும் முடியவில்லை. சிலைகளையாவது காப்போம் என்று நினைத்தோ என்னவோ எல்லா இடங்களிலும் சிலைகளையே சிறைப்படுத்திவிட்டார்கள். மனிதர்களாக ஊருக்கு வெளியே எங்கேயோ, யாரோ சிறைவைத்ததற்குப் பதிலாக, இப்போது ஊருக்கு நடுவே, சாலைச் சந்திப்புகளில் கம்பிக் கூண்டுகளுக்குப் பின்னால் தலைவர்கள்! ஒருவேளை இதைப் பார்க்க உயிருடன் எழுந்துவந்தால் நிச்சயமாக இதற்காக எந்தத் தலைவரும்



பெருமைப்பட மாட்டார்கள். அது சரி, சுதந்திர நாட்டில் இப்படித் தலைவர்கள் எல்லாம் இங்கே சிலைகளாகச் சிறை வைக்கப்பட்டிருப்பதற்காக யார் யாரெல்லாம் வெட்கப்பட வேண்டும்?

## இந்தவார ராசிபலன் 18.08.2024 - 24.08.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 02
நல்ல நேரம்: 9.05 - 10.35 ராகு காலம் : 4.35 - 06.05 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். போட்டி பொறாமைகள் அதிகமாகும். எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். பண விஷயமான சிந்தனைகள் எழும். சிலர் காவல்துறை பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். செய்யும் தொழிலில் தடைகள் ஏற்படலாம். தந்தை வழி உறவுகள் மூலம் தொல்லை ஏற்படலாம். குழந்தைகள் மூலம் அவமானமும், மனக்கலக்கம் ஏற்படலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். பூஜா வழிபாடுகளும், பெரியோர் ஆசிகள் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும். வாக்கு வன்மையால் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். சகோதரரால் நன்மைகள் உண்டு. எனவே, கோபத்தை அடக்கி அவர்களுடன் ஒத்துப் போவது நல்லது. நண்பர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் காண்பீர்கள். மனோதைரியம் அதிகரிப்பதன் மூலம் எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். துவக்கத்தில் கையில் எடுக்கும் காரியங்களில் எல்லாம் தடை, தாமதங்கள் ஏற்படும், வேலைகளை முடிக்க தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கிய திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். பணவரவால் மனம் மகிழும். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு வரும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். அரசு பதவியில் உள்ளவர்களின் அனுகூலமான நடவடிக்கைகள் மனதில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் அன்பு மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். புது வீடு கட்டிக் குடியேறும் பாக்கியம் ஏற்படும். உங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும்.

ஈழநாடு



# சென்னை: சர்வதேச சமூகம் கண்டு அச்சப்படும் நிலையில் இருக்கிறதா?

“இப்போ கடல் ரொம்ப வயலா இருக்கு (ஒரு சில அலைகள் மட்டுமே இருக்கும், பெரிய அலைகள் இல்லாத நிலை). இந்த மாதிரி இருக்கும்போது ராத்திரில கடலுக்குப் போனாதான் வரிப்பாறை, கருவாழை போன்ற மீன்கள் கிடைக்கும். கடல் இப்படி இருக்கும்போது தண்ணி ரொம்ப தெளிவா இருக்கும். காலையில போனா மீன் கண்ணுக்கு வலை நல்லா தெரிஞ்சு, சிக்காம தப்பிச்சுக்கும்.”

“இதையெல்லாம், அனுதினமும் கடலைப் பார்த்துதான் தெரிஞ்சுக்க முடியும். கடல்-ல இருந்து ரொம்ப தொலைவுல கொண்டுபோய் என்னைக் குடித்தனம் வெச்சா, நினைச்ச நேரத்துக்கு வந்து கடலைப் பார்க்க முடியுமா? எப்போ போனா மீன் கிடைக்கும், கிடைக்காதுனு தெரிஞ்சுக்க முடியுமா?”

நகரத்தைத் திட்டமிடும்போது அரசாங்கம் இப்படிப்பட்ட நடைமுறை சவால்களைக் கவனத்தில் கொள்வதில்லை என்று வருந்துகிறார் சென்னை அடையாறு அருகே இருக்கும் ஊரூர் குப்பத்தைச் சேர்ந்த மூத்த மீனவரான பாளையம்.




சென்னை நகரின் சுமார் 7 வீத நிலப் பகுதி 2040ஆம் ஆண்டுக்குள் கடலுக்குள் மூழ்கும் என்று சமீபத்திய ஆய்வறிக்கை ஒன்று எச்சரித்துள்ளது.

இந்த ஆண்டில் பதிவான வெப்ப அலை இதுவரை இருந்ததைவிட அதிக பாதிப்புகளை சென்னையில் ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் வெள்ளப் பேரிடர்களை நகரின் ஒரு சில பகுதிகளாவது எதிர்கொள்வது வழக்கமாகி வருகிறது.

இந்தப் பேரிடர்களின்போது சென்னை தாக்குப்பிடிக்க முடியாமல் திணறக் காரணமே அதன் கட்டமைப்புதான் என்கிறார் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோ.சுந்தர்ராஜன்.





“சென்னை ஒரு முறையாகத் திட்டமிடப்பட்ட பெருநகரமே இல்லை. அதுதான் இங்கு நகரக் கட்டமைப்பின் ஓர் அடிப்படைப் பிரச்னையாக இருக்கிறது.” என்கிறார் அவர்

இந்நிலையில், பேரிடர் பாதிப்புக்கு உள்ளாகும் சென்னையின் நகரத் திட்டமிடல் அந்தப் பேரிடர்களைக் கையாளும், மக்களின் வாழ்வியலைக் காக்கும் திறனைக் கொண்டுள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

**கடலின் தன்மை மாறி வருகிறதா?**

“ஆடியில பெரிய பெரிய இறால் கிடைக்கும். இந்த மாசத்துல கடல் ஆக்ரோஷமா சொறப்பா இருக்குறதால, கடல் ஆழம் வரைக்கும் தண்ணிய நல்லா கலக்கிவிடும். அதனால, ஆழத்துல இருக்குற இறால், நண்டு, உடுப்பா, பன்னா, கருங்கத்தல மாதிரியான உயிரினமெல்லாம் கடலுக்கு மேல வந்து மேயும்.

இப்போ பாருங்க, ஆடி மாதம் முடிய 3 நாள்தான் இருக்கு. அலையே பெருசா இல்ல. கடல் சாதுவா இருக்குது.”

“ஆனால், ஜூலை மாசத்துல, அதாவது ஆனி மாசம் முழுக்க, கடல் ரொம்ப சொறப்பா இருந்துச்சு (ஆக்ரோஷமான அலைகளுடன், பனிக்கட்டி போன்ற குளிர் நீருடன்). அதிகாலையில கால்ல தண்ணி பட்டாலே ஐஸ் மாதிரி ஜில்லுனு இருக்கும். அதைத்தான் வண்டத் தண்ணினு சொல்லுவோம். இப்படி ஆடி மாசம் இருக்க வேண்டிய கடல், ஆனி மாசமே வந்துட்டு போயிருச்சு.”

கடந்த ஆகஸ்ட் 14ஆம் தேதி என்னுடன் அடையாறு முகத்துவாரத்தை நோக்கிக் கடலோரமாக நடந்தபடியே வந்த பாளையம் தனது மீன மொழியில் காலநிலை மாற்றத்தை விளக்கினார். இந்த மாதத்தில் வீசவேண்டிய காற்றும் நிலவ வேண்டிய கடலின் தன்மையும், ஜூலை மாதத்திலேயே முடிந்துவிட்டதைத் தனது அவதானிப்புகளின் மூலமாக அவர் பதிவு செய்துள்ளார்.

இப்படியாக காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தனது மொழியில் விவரித்துக்கொண்டே அதிகாலை வேளை யில் ஊரூர் குப்பம் கடற்கரையில் தொடங்கி அடையாறு முகத்துவாரத்தை நோக்கி என்னுடன் நீண்ட நேரம் நடந்து வந்தார்.

பாளையம் சொல்வதுபோல், கடலின் தன்மை மட்டுமல்ல, சென்னை கட லோரத்தில் நிகழும் கடலரிப்பும் கடல் மட்ட உயர்வும் அஞ்சத்தக்க வகையில் திவிரமடைவதாக வல்லுநர்கள் எச்சரிக் கின்றனர்.

சென்னையில் 2040ஆம் ஆண்டுக்குள் சுமார் ஏழு சதவீத நிலம் நீரில் மூழ்கும் என்று கடந்த ஆகஸ்ட் 1ஆம் தேதி வெளியான ஓர் ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது. பெங்களூருவை தளமாகக் கொண்டு இயங்கிவரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வு மையம் மேற்கொண்ட இந்த ஆய்வில், இந்திய கடலோர நகரங்களுக்கான வெள்ள வரைபடங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின்படி, அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா, பள்ளிக்கரணை சதுப்புநிலம், மெட்ராஸ் துறைமுகம் ஆகியவை கடல்மட்ட உயர்வால் மூழ்கும் ஆபத்து இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், “2040ஆம் ஆண்டுக்குள் சென்னைப் பெருநகரில் சுமார் 7.29 வீத பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்துவிடும் என்றும் 2060ஆம் ஆண்டில், 9.65 வீத பகுதிகள் கடலில் மூழ்கும் எனவும், அதுவே 2100இல் 16.9 வீதம், அதாவது சென்னையின் பரப்பளவில் 207.04 சதுர. கி.மீ மூழ்கிவிடும் என்றும்” இந்த ஆய்வு எச்சரிக்கிறது.

இதேபோல், கடந்த மாதம் அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கைப்படி, 2050ஆம் ஆண்டுக்குள் தமிழக கடலோர பகுதியில் 19.2செ.மீ. அளவுக்கு கடல் மட்ட உயர்வு இருக்கலாம். இதனால் “சென்னை பெருநகரில் மட்டுமே சுமார் 6,120 ஹெக்டேர் நிலப்பகுதி கடலுக்குள் செல்லக்கூடும்” என எச்சரிக்கப்படுகிறது.

இவற்றின் விளைவாக ஏற்கெனவே பெருகிவரும் காலநிலை பேரிடர்கள், அதிதீவிர பருவநிலை நிகழ்வுகளின் தாக்கம் இன்னும் அதிகமாக இருக்கும் என்றும் எச்சரிக்கிறது சி.சி.சி.டி.எம் -இன் இந்த ஆய்வு.

“விஞ்ஞானிகள் 2050ஆம் ஆண்டுக்குள் கடலுக்குள் மூழ்கலாம் என்றுதான் எச்சரித்துள்ளார்கள். கண்டிப்பாக மூழ்கும் எனச் சொல்லவில்லை. ஆனால், அரசு இதைக் காரணம் காட்டி கடலோரத்தில் இருக்கும் மீனவர்களை நகரத்திற்குள் இடம் மாற்றுமே தவிர, இதன் விளைவாக இப்போது அதிகரிக்கும் பேரிடர் அபாயத்தில் இருந்து எங்களைப் போன்ற எளிய மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்குமா?” என்று அச்சம் தெரிவிக்கிறார் பாளையம்.

பாளையம் போன்ற எளிய சமூகத்தினர் முன்வைக்கும் ஒரே கேள்வி, “இந்தப் பேரிடர்களைத் தாங்கி நின்று, எங்களை அச்சமின்றி வாழ வைக்கும் திறன் சென்னை பெருநகருக்கு இருக்கிறதா?”

“உண்மையில் இல்லை” என்பதே அதற்கான பதில் என்கிறார் கேர் எர்த் அமைப்பின் நிர்வாக அறங்காவலரும் மூத்த சூழலியல்வாதியுமான ஜெயசிறி வெங்கடேசன்.

“சென்னைக்கான இரண்டாவது மாஸ்டர் ப்ளான் வரையிலும், பெருநகர் எதிர்கொள்ளும் பேரிடர்களோ, சமூக சமத்துவமின்மையோ, சூழலியல் பாதுகாப்போ எதுவுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை. உரிய வகையில் கருத்துகள், ஆலோசனைகள் கேட்கப்படவில்லை.

ஆனால், தற்போது உருவாக்கப்பட்டு வரும் மூன்றாவது மாஸ்டர் ப்ளானில் அத்தகைய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் அது போதவில்லை,” என்பதே அவரது கூற்று.

நகரத் திட்டமிடுதலைப் பொறுத்தவரை ஒரு போதாமை எப்போதுமே நிலவுவதாக ஜெயசிறி கூறுகிறார். அதாவது, காலநிலை நெருக்கடியின் ஆபத்துகளைப் பற்றி அதிகாரிகள், வல்லுநர்கள் மட்டத்தில் பரவலாக ஒரு புரிதல் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், அந்தப் புரிதலை “நகரத் திட்டமிடுதலில் எப்படிக் கொண்டு வந்து பொருத்துவது? காலநிலை ஆபத்துகள் இருக்கின்றன சரி. அந்த அபாயங்களைக் கையாளத் தகுந்த நகரத்தைத் திட்டமிடுவது எப்படி?” இதில் அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை என்கிறார் அவர்.

“பல்வேறு மீன்பிடிக் கிராமங்கள், பாக்கங்கள், பேட்டைகள், எனச் சுற்றியிருந்த பல பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கித்தான் சென்னை இப்போதைய நிலைக்குப் பெருத்துள்ளதாக” சுந்தர்ராஜன் கூறுகிறார்.

அவரது கூற்றுப்படி, பல நீர்நிலைகள், சதுப்புநிலங்களை அழித்துதான் இப்போதைய சென்னை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணங்களால் நகர்புற வெப்பத் தீவுகள், வெப்ப அலை, கடல் அரிப்பு, வெள்ளம் எனப் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

சென்னை, மும்பை போன்ற பெருநகரங்கள் மிகக் கடுமையான காலநிலை சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் அவற்றைக் கையாள்வதற்கு ஏற்ற நகரக் கட்டமைப்பு இந்த நகரங்களுக்கு இல்லை எனவும் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சென்னையில் நகர்ப்புற வெப்பத் தீவுகள், அதாவது 40 டிகிரி செல்ஷியஸ் இருந்தாலும்கூட, 50 டிகிரி அளவுக்கு மக்கள் வெப்பத்தை உணரும் நிலை வெகுவாக அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறம் இருக்க, கிழக்குக் கடற்கரையில் கடும் கடல் அரிப்பு ஏற்பட்டு வருவதாகவும் சென்னையின் ஆறுகளைத் தூர்வாருவதில் முறையான அறிவியல்பூர்வ அணுகுமுறை பின்பற்றப்படுவதில்லை எனவும் சுந்தர்ராஜன் எச்சரிக்கிறார்.

இதற்குச் சான்றாக, அடையாறு முகத்துவாரப் பகுதியைச் சுட்டிக் காட்டுகிறார் மீனவர் பாளையம். அவருடன் அடையாறு முகத்துவாரப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டபோது, முகத்துவாரம் மிகச் சிறிதாக, ஆழமற்று இருந்ததைக் காண முடிந்தது.

“முகத்துவாரத்தை நல்லா ஆழப்படுத்தி, கடல்நீர் உள்ள போய், வர ஏதுவா தூர்வாரணும். ஆனால், இங்கு மண்ணை எங்கே எடுக்க வேண்டும் என்ற திட்டமிடலே இல்லாமல் அகற்றி, முகத்துவாரப் பகுதியின் ஓரத்திலேயே மீண்டும் குவித்துவிடுகிறார்கள். இதனால், ஒரு மழை பெய்து ஆற்று நீர் வரும்போதோ, கடல் நீரோட்டத்தின் போதோ, அங்கு தேங்கியிருக்கும் மண்ணை அது மீண்டும் சேர்த்துவிட்டுச் செல்கிறது.”

இப்படிச் செய்தால், முகத்துவாரத்தில் எப்படி கடல்நீர் உள்ளே வந்து செல்லும், மீன்கள் எப்படி ஆற்றுக்குள் வரும், போகும் என்று ஆதங்கப்படுகிறார் அவர்.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வு மையத்தின் ஆய்வுப்படி, கடந்த 1987 முதல் 2021 வரையிலான காலகட்டத்தின்போது சென்னையில் 0.679 செ.மீ. கடல்மட்டம் உயர்ந்துள்ளது. அதாவது “ஆண்டுக்கு, 0.066செ.மீ. அளவுக்கு உயர்ந்துள்ளது.“

இந்திய கடலோரங்களைப் பொறுத்தவரை, கடந்த 30 ஆண்டுகளில் அதிகபட்ச கடல்மட்ட உயர்வு மும்பையில் பதிவாகியிருப்பதாகவும் ஆய்வறிக்கை கூறுகிறது. அதன்படி, “மும்பையின்

(07ஆம் பக்கம் பார்க்க)

# 2024 இலங்கை ஜனாதிபதி தேர்தல்: வேட்பாளர்கள் குறித்த முக்கிய தகவல்கள்!





ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையில் 9-ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தலுக் கான வேட்பு மனுத் தாக்கல் வியாழன், 15 ஆகஸ்ட் அன்று நிறைவடைந்த தையடுத்து, இம்முறை தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்க ளுக்கான கட்டுப் பணம் செலுத்தவேண்டிய காலக்கெடு புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில், வியாழக் கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை வேட்பு மனுத் தாக்கலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது 39 வேட்பாளர்கள் தேர்தல் ஆணைக் குழுவிற்கு வருகை தந்து, தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

2024-ஆம் ஆண்டுக்கான ஜனாதிப தித் தேர்தல் வேட்பு மனுக்கள் தொடர் பில் மூன்று ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்ட நிலையில், அந்த மூன்று ஆட்சேப னைகளும் தேர்தல் ஆணைக்கு ழுவினால் நிராகரிக்கப் பட்டன.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர்கள் தொடர்பான அறிவிப்பு வெளி யிடப்பட்டது.

**வேட்பாளர்கள் யார் யார்?**

கீழ்க்கண்ட 39 பேர் இம்முறை ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க
சஜித் பிரேமதாஸ
அநுரகுமார திஸாநாயக்க
நாமல் ராஜபக்ஸ
பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா
விஜயதாஸ ராஜபக்ஸ
திலித் சுசந்த ஜயவீர
சரத் மனமேந்திர
பா.அரியநேத்திரன்
மயில்வாகனம் திலகராஜ்
அபுபக்கர் மொஹமட் இன்பாஸ்
ஏ.எஸ்.பி.லியனகே
பானி விஜேசிறிவர்தன
பிரியந்த புஸ்பகுமார விக்ரமசிங்க
அஜந்த டி சொய்சா
பத்தரமுல்லே சீலரத்ன தேரர்
நுவன் சஞ்ஜீவ பேபகே
ஹிட்டிஹாமிலாகே தோன் ஒஷல லக்மால் அனில் ஹேரத்
ஜனக்க பிரியந்த குமார ரத்நாயக்க
கே.கே.பியதாஸ
சிறிபால அமரசிங்க
சரத் கீர்த்திரத்ன
கே.ஆனந்த குலரத்ன
கீர்த்தி விக்ரமரத்ன
மரக்கலமானகே பிரேமசிறி
லலித் டி சில்வா
பி.டபிள்யூ.எஸ்.கே.பண்டாரநாயக்க
டி.எம்.பண்டாரநாயக்க
அகம்பொடி பிரசங்க சுரஞ்ஜீவ அனோஜ் டி சில்வா
அநுருத்த ரணசிங்க ஆராய்ச்சிகே ரொஷான்

**19 ஆண்டுகளுக்குப் பின்னர் ரணில் போட்டி**

இம்முறை தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போட்டியிடுகின்றார்.

கடந்த 1999 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யானை சின்னத்தில் போட்டி யிட்ட ரணில் விக்ரமசிங்க அந்த இரண்டு சந்தர்ப்பங்களில் தோல்வியை சந்தித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடாத நிலையில், இம் முறை மூன்றாவது தடவையாக போட்டியிடுகின்றார்.

எனினும், 2019ஆம் ஆண்டு தெரி வான கோட்டா பய ராஜபக்ஸ, நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட் டத்தை அடுத்து, நாட்டை விட்டு தப்பிச் சென்ற நிலையில், இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரம சிங்க பொறுப்பேற்றார்.

அதனைத் தொடர்ந்து, நாடாளுமன் றத்தில் நடத்தப் பட்ட வாக்கெடுப்பில் இலங்கையின் இடைக்கால ஜனாதிபதி யாக ரணில் விக்ரமசிங்க அரசியலமைப் புக்கு அமைவாக நியமிக்கப்பட்டார்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து வழமைக்குக் கொண்டு வந்ததாக கூறப்படுகின்ற நிலையில், ரணில் விக்ரமசிங்க இம்முறை தேர்தலில் 19 வருடங்களின் பின்னர் போட்டியிடுகின்றார்.

இடைக்கால ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஒருவர் முதல் முறையாக தேர்தலில் போட்டியிடும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த சுமார் 100இற் கும் அதிகமான உறுப்பினர்கள் ஆதரவை வெளியிட் டுள்ளனர்.

இந்த நிலையில், 2019-ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக முன்னின்று பணியாற்றிய முக்கிய உறுப்பினர்களில் பலர், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகச் செயற்படும் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒரு தரப்பினர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாய கக் கட்சி உள்ளிட்ட பல பிரதான கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த நிலையில், சுயாதீன வேட்பாளராக களமிறங்கி யுள்ள ரணில் விக்ரமசிங்கவிற்கு, தேர்தல் ஆணைக்குழு வினால் எரிவாயு சிலிண்டர் (காஸ் சிலிண்டர்) சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

**சஜித் பிரேமதாஸ**

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாகவும் பலர் அவருடன் இணைந்து வரு வதை அவதானிக்க முடிகின்றது.

பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாஸ இரண்டாவது முறை யாகப் போட்டியிடுகின்றார்.

2019-ஆம் ஆண்டு முதல் முறையாக கோட்டாபய ராஜபக்ஸவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ, இரண்டாவது இடத்தை தனதாக்கிக் கொண்டார்.

சஜித் பிரேமதாஸவிற்கு மனோ கணேசன் தலைமை யிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமைமை யிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷ ாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட பிரதான கட்சிகளின் ஆதரவும் கிடைத் துள்ளது.

ரணில் விக்ரமசிங்கவின் தலைமையி லான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கருத்து வேறுபாடு காரணமாக 2019 -ஆம் ஆண்டு பிரிந்த சஜித் பிரேமதாஸ தரப்பு, ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட் சியை ஸ்தாபித்திருந்தது.

இந்த நிலையில், சஜித் பிரேமதாஸ தொலைபேசி சின்னத்தில் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றார்.

**அநுர குமார திஸாநாயக்க**

மக்கள் விடுதலை முன்னணி தலை மையிலான தேசிய மக்கள் சக்தி சார்பில் இரண்டாவது தடவையா கவும் அநுரகுமார திஸாநாயக்க களமிறக்கப்பட் டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸா நாயக்க மூன்றாவது இடத்தை தனதாக்கிக் கொண்டி ருந்தார்.

இலங்கையில் இதுவரை காலம் ஆட்சி புரிந்தவர்கள் ஊழல், மோசடி களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் தமது பிரசாரத்தை முன்னெடுத்து வரும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அலை அதிகரித் துள்ளதை அவதானிக்க முடிவதாக அரசியல் ஆய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பொருளாதார நெருக் கடிக்கு பின்னரான போராட்டத்தை அடுத்தே, தேசிய மக்கள் சக்தி மீதான ஆதரவு அதிகரித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள், தொழிற்சங் கங்கள் உள்ளிட்ட பெருந்திரளானோரின் ஆதரவை பெற்றுக்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியுடன் ஏனைய பிரதான கட்சிகள் இதுவரை இணையவில்லை.

தமது கட்சியுடன் பலர் இணைய முயற்சித்த போதிலும், அவர்களின் பின்னணி ஏற்புடையதல்லாமை யினால் அவர்களை தமது கட்சியுடன் இணைத் துக்கொள்ளவில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

**நாமல் ராஜபக்ஸ**

இலங்கையில் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்து, உள் நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தலைமைத்துவம் வழங்கிய மஹிந்த ராஜபக்ஸவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஸ இம்முறை தேர்தலில் முதல் தடவையாக போட்டியிடு கின்றார்.

கோட்டாபய ராஜபக்ஸ பதவி துறந் ததை அடுத்து, இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க ஆட்சியை தொடர்வதற்கு மஹிந்த ராஜபக்ஸ தலை மையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாரிய பங்களிப்பை வழங்கியிருந் தது.

இந்தநிலையில், இம்முறை தேர்தலில தமது கட்சி தமது சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டும் என்ற நிலைப் பாட்டின் அடிப்படையில் நாமல் ராஜபக்ஸ தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்தினார் என்ற அடிப்படை யில் மஹிந்த ராஜபக்ஸ மீது பெரும்பான்மை சிங்கள மக்கள் இன்றும் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்த ஆதரவை முன்னிலைப்படுத்தி, நாமல் ராஜ பக்ஸ இம்முறை தேர்தலில் போட்டியிடுவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)






# தமிழரசின் மூத்த துணைத்தலைவரின் மூன்று முக்கிய கருத்துகளுக்கு சுமந்திரன் கூறும் பதில் என்ன?

பனங்காட்டான்

யாழ்ப்பாண மாவட்டத்தின் நல்லூர் தேர்தல் தொகுதி 1960ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத் தொகுதிக்கான முதலாவது பொதுத்தேர்தல் அதேயாண்டு மார்ச் மாதம் இடம்பெற்றது.

தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், சம சமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்களுடன் மேலும் இருவர் சுயேச்சையாகப் போட்டியிட்டனர். இவர்களுள் ஒருவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் வணிகம் செய்து வந்தவர். அதற்கேற்றாற்போல் அவரது சின்னம் தராசு. இத்தேர்தலில் ஆறாவதாக வந்த இவருக்கு கிடைத்த வாக்குகள் 224 மட்டுமே. இவ்வளவு தொகை வாக்குகள் கிடைத்தது அவருக்குப் பெரும் ஆச்சரியம்.

பத்திரிகையாளர் ஒருவர் இவரைப் பேட்டி கண்டபோது தேர்தலில் போட்டியிட்ட நோக்கத்தை இவர் அழகாகச் சொன்னார். "வருங்காலத்தில் எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுக்கு நற்காரியங்கள் நடைபெறும்போது லெக்சன் கேட்ட இன்னாரின்..... என்று எனது பரம்பரையை சொல்லுவார்கள்" என்பது இவரது பதில். ஆயிரம் ரூபா கட்டுப்பணத்துடன் இவர் பிரபல்யம் ஆகிவிட்டார்.

இது வேடிக்கைக் கதையல்ல. உண்மையாக இடம்பெற்றது. அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் 39 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களுள் சிலர் பினாமிகளாக இறக்கப்பட்டுள்ளனர். 16 பேர் சுயேச்சைகள். இந்தச் செய்திகளைப் படிக்கும்



போது 1961ல் நல்லூர் தொகுதித் தேர்தல் ஞாபகத்துக்கு வந்ததை தவிர்க்க முடியவில்லை. அதாவது சுயேச்சைகளாக போட்டியிடும் பலருக்கும் எந்தக் கொள்கையும் இல்லை. அரசியல் செல்நெறியும் கிடையாது. எதற்காக, யாருக்காக போட்டியிடுகிறோம் என்பதும்கூட சிலருக்குத் தெரியாது. இதனால்தான் இவர்களை சுயஇச்சைகள் என்று கூறுவர்.

1960க்கும் 2024க்கும் இடையில் சுமார் 65 ஆண்டுகள் ஓடிவிட்டதாயினும், தேர்தல் காட்சிகளில் மாற்றம் தெரியவில்லை. எழுபத்தையாயிரம் ரூபாவாக இருக்கும் சுயேச்சைகளின் கட்டுப்பணத்தை ஒரு மில்லியன் ஆக்கினாலும் வேட்பாளர் எண்ணிக்கை குறையாது. காரணம், காசுப்புழக்கம் அவ்வாறிருக்கிறது.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் முதலில் கட்டுப்பணம் செலுத்தியவர் ரணில் விக்கிரமசிங்க. எழுபத்தைந்து வயதான இவர் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார். ஆறு தடவைகள் பிரதமராக பதவி வகித்தவர். 1977ம் ஆண்டிலிருந்து 45



ஆண்டுகளாக அரசியலில் ஆதிக்கம் செலுத்துபவர். ஆனால் இந்தத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுகிறார். இவரது அரசியல் வரலாற்றில் இது விநோதமான காலகட்டம்.

தேர்தல் வேட்பாளர் நியமனத்தின் பின்னர் 34 அரசியல் கட்சிகளையும் பிரமுகர்களையும் இணைத்த தமது தேர்தல் கூட்டணியை இவர் அறிவித்துள்ளார். எதிர்த் தரப்பில் 27 அரசியல் கட்சிகளும் பிரமுகர்களும் சஜித் பிரேமதாசவுக்கு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். களத்தில் கடைசியாக இறங்கிய பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ச வெற்றி கிடைக்காவிடினும் 2029 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரோகணவைபவமாக இதனைப் பார்க்கிறார். ஜே.வி.பி. வேட்பாளர் அநுர குமார திச நாயக்க நம்பிக்கையோடு போட்டியில் இறங்கியுள்ளார்.

தேர்தல் முடியும்வரை கட்சித் தாவல்கள் தொடருமாதலால் யார் யாருடன் என்பதை இப்போது சொல்ல முடியாது. ஒவ்வொரு நாளும் இந்தக் காட்சி இடம்பெறப்போகிறது. தேர்தல் ஆணையம் நாளும் கோளும் பார்த்து காலத்தையும் நேரத்தையும் தீர்மானித்தி ருந்தாலும் கட்சிகளும் சொரியல்களும் தம்பாட்டிலேயே செயற்படப் போகின்றன. வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கலுக்கு ராகு காலம் இல்லாத நேரம் பார்த்து தேர்தல் ஆணையம் நேரத்தை அறிவித்தது. மகிந்தவின் பெரமுன சார்பில் போட்டியிடவிருந்த சூதாட்ட கோடீஸ்வரரான தம்மிக்க பெரேரா சோதிட வழிகாட்டலில் இறுதி நேரத்தில் விலகிக் கொண்டுள்ளார். வேட்பாளர் தெரிவை 7ம் திகதி மேற்கொள்ள வேண்டாமென்றும் தமக்கு அதிர்ஸ்டமான 6ம் திகதியை இவர் சிபார்சு செய்த போதும் மகிந்த தரப்பு அதனை ஏற்காததால் வேட்பாளராகும் அதிர்ஸ்டம் நாமல் ராஜபக்சவுக்குப் போனது.

வேட்பாளர்களின் சின்னங்கள் பற்றியும் சுவையான தகவல்கள் வந்துள்ளன. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எரிவாயு சிலிண்டர் சின்னம் கிடைத்துள்ளது. நாட்டில் நிலவிய எரிவாயு தட்டுப்பாட்டை அவர் நீக்கியதால், இறைவன் ஆசிர்வாதத்துடன் இச்சின்னம் ரணிலுக்குக் கிடைத்ததாக அவரின் ஆலோசகர்களில் ஒருவரான ஆசு மாரசிங்க மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இதற்கு மறுத்தானாக, எரிவாயு இல்லாத வெற்றுச் சிலிண்டர் ரணிலுக்கு மிகப் பொருத்தமான சின்னம என்று அநுர குமார திசநாயக்க தரப்பு நையாண்டி



செய்துள்ளது. நல்லவேளை குரங்கு, பன்றி போன்ற விலங்குகள் எவருக்கும் கிடைக்காதது.

ஈழத்தமிழர்களின் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பாக்கியசெல்வம் அரியநேந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ள சின்னம் சங்கு. தமிழர்களின் சுபகாரியங்கள், வழிபாடுகள், முற்கால அரசர்களின் அரண்மனைகள் ஆகியவற்றில் சங்கு பிரதான இடம்பெறும் ஒன்று. தமிழரின் பலத்தையும் ஒற்றுமையையும் போட்டியிடும் நோக்கத்தை பூரணப்படுத்துவதாக இச்சின்னம் அமைந்துள்ளது என்பது பலரதும் கருத்து. ஆனால், தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்கள் சங்குச் சின்னத்தையும் பதம் பார்க்கத் தொடங்கியுள்ளனர் போலத் தெரிகிறது.

**தமிழரசுக் கட்சி ஆதரவளித்த வேட்பாளர்கள் தேர்தல்களில் தோல்வியையே சந்தித்துள்ளனர். இனிமேல் தமிழரசு ஆதரிப்பவர்களை தமிழ் மக்கள் ஆதரிப்பார்களா? தனிப்பட்ட வேட்பாளரைச் சுட்டிக்காட்டி ஆதரவு வழங்குவது பின்னர் சிக்கலான நிலையை உருவாக்கும் என்கிறார் தமிழரசின் மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.**

சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பது தமிழ்ப் பொன்மொழி.

தென்னிலங்கையைப் பொறுத்தளவில், தமிழ்ப் பொதுவேட்பாளரை போட்டியில் இறக்கியுள்ள தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினரை சந்திப்பதில் ரணிலும் சஜித்தும் போட்டியாக ஈடுபட்டுள்ளனர். பொதுவேட்பாளரை தடுக்க முடியாது போனால், அவருக்கு வாக்களிப்பவர்களின் இரண்டாவது வாக்கையாவது தங்களுக்குத் தருமாறு இறுதி நேரத்தில் பிச்சை கேட்குமளவுக்கு சிங்களத் தலைவர்கள் இறங்கியுள்ளதை முதன்முறையாக பார்க்க முடிகிறது. இதுவே தமிழ்ப் பொதுவேட்பாளருக்குக் கிடைத்த மிகப்பெரும் பலமாகும்.

அதேசமயம், இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய தீர்வை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை ஆதரிப்பதென்று தமிழரசுக் கட்சி முடிவெடுத்துள்ளதாக அதன் எம்.பிக்களில் ஒருவரான சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம், வடக்கு கிழக்கு இணைந்த கட்டமைப்பு ஆகியவற்றை தமிழருக்கான தீர்வாக இதுவரை எந்தவொரு சிங்கள ஜனாதிபதி வேட்பாளரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் அவர்கள் வழங்கும் தேர்தல் வாக்குறுதியை நம்பி அவர்களுக்கு ஆதரவளிக்க தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருப்பது என்பது அக்கட்சியின் தற்கொலை முடிவுக்குச் சமமானது.

யதார்த்தமாகக் கூறின், தமிழரசுக் கட்சி கேட்கும் சமஷ்டி அடிப்படையிலான வடக்கு கிழக்கு இணைந்த அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியே தமிழ்ப் பொதுவேட்பாளராக அரியநேந்திரன் போட்டியிடுகிறார். இதனை அவரே பல தடவை பல ஊடகங்கள் வாயிலாக தெரிவித்தும் உள்ளார். இதனை நன்றாக அறிந்துகொண்டும் பொதுவேட்பாளரைத் தோற்கடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்பவர்களை சிங்களத்துக்கான தரகர்களாகவே பார்க்க முடிகிறது.

தமிழ் மக்களின் வாக்குகளை தம்மால் பெற்றுத்தர முடியுமென்று தெரிவித்தவரை நம்ப முடியாதுள்ள சிங்கள வேட்பாளர்கள், தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினரை நேரடியாகச் சந்திப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனை நன்கு புரிந்து கொண்டதாலோ என்னவோ தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் திரு. சீ.வீ.கே.சிவஞானம் மூன்று முக்கியமான விடயங்களை ஊடக சந்திப்பொன்றில் வெளிப்படுத்தியுள்ளார். இவரது கருத்துகள் இவர் சார்ந்த தமிழரசுக் கட்சியினது என்றில்லாமல் இவரது தனிப்பட்டவையாக இருப்பினும், இவற்றுக்கு பதிலளிக்க வேண்டியது சுமந்திரனின் கடப்பாடாக அவதானிக்கப்படுகிறது.

திரு. சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்த மூன்று கருத்துகளும் பின்வருமாறு:

- இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கும் வேட்பாளர்கள் அநேகமாக தோல்வியையே சந்தித்துள்ளனர்.
- தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கும் வேட்பாளர்களை தமிழ் மக்கள் ஆதரிப்பார்களா என்பது கேள்விக்குறி. அவர்கள் சிந்தித்து செயற்பட தயாராகி விட்டனர்.
- தனிப்பட்ட வேட்பாளரை மாத்திரம் சுட்டிக்காட்டி ஆதரவு வழங்குவது தேர்தல் முடிவின் பின்னர் சிக்கலான நிலையை உருவாக்கும்.

தமிழ் மக்கள் சிங்கள வேட்பாளர்களிடம் எதனையும் எதிர்பார்ப்பதற்கில்லை. இது கடந்த காலம் தந்த கசப்பான அனுபவம். இந்நிலையில் தங்கள் பலத்தையும் கோரிக்கையையும் ஒரே குரலில் சர்வ தேசத்துக்கு தெரிவிப்பதற்காகவே பொதுவேட்பாளர் ஒருவர் முதன்முறையாக களத்தில் இறக்கப்பட்டுள்ளார். இதனால், தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத்தலைவர் தெரிவித்த கருத்துகளுக்கு பதிலளிக்க வேண்டியவராக சுமந்திரன் காணப்படுகிறார்.

# முன்னைய தேர்தல்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட அரசியல் கோலங்களுடன் 2024 ஜனாதிபதி தேர்தல்!



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் இந்த தடவையே மிகவும் அதிக எண்ணிக்கையில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இதுகாலவரையில் ஜனாதிபதி தேர்தல் பிரதான இரு அரசியல் கட்சிகளின் அல்லது அவற்றின் தலைமையிலான கூட்டணிகளின் வேட்பாளர்களுக்கு இடையிலான நேரடிப் போட்டியாகவே இருந்து வந்தது. ஆனால் இந்த தடவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலான மும்முனைப் போட்டியாகவே தேர்தல் அமையப்போகிறது.

இறுதி நேரத்தில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வனும் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாரிசுவுமான நாமல் ராஜபக்ச களத்தில் இறக்கப்பட்டிருப்பதை அடுத்து மும்முனைப் போட்டி என்ற தோற்றப்பாட்டில் மாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்குமா என்ற கேள்வியுடன் சில அரசியல் அவதானிகள் குழப்பகரமான கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

அதேவேளை நாமல் ராஜபக்சவையும் மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீரவையும் சேர்த்து ஐந்து பிரதான வேட்பாளர்களுக்கு இடையிலான போட்டியாக ஜனாதிபதி தேர்தலை சில ஊடகங்கள் காண்பிக்க முயற்சிக்கின்றன.

விக்கிரமசிங்கவும் பிரேமதாசவும் பெருவாரியான கட்சிகள், குழுக்களுடன் சேர்ந்து கூட்டணிகளை அமைக்கிறார்கள். ராஜபக்சாக்களை கைவிட்டு வருபவர்கள் இருவருடனும் இணைகிறார்கள். சில கட்சிகளின் தலைவர்கள் எடுக்கும் முடிவுகளுக்கு மாறாக அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொந்தத்தில் முடிவுகளை எடுத்து வெவ்வேறு அணிகளில் தங்களை இணைத்துக்கொள்கிறார்கள். கட்சித் தாவல்கள் தீவிரமடைந்திருக்கின்றன. எவர் எந்தப் பக்கம் நிற்கிறார் என்று குழப்பமாக இருக்கிறது. இந்த இலட்சணத்தில் புதிய அரசியல் கலாசாரம், முறைமை மாற்றம் பற்றியும் வாய்கூசாமல் பேச்சு.

இந்த தடவை ஜனாதிபதி தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஒரு அரசியல் சூழ்நிலையில் இடம்பெறுகிறது. இரு வருடங்களுக்கு முன்னர் ராஜபக்சாக்களின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட படுமோசமான பொருளாதார நெருக்கடி



இலங்கையின் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையிலான பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சியை மூளவைத்தது. ராஜபக்சாக்களை அதிகாரத்தில் இருந்து விரட்டிய அந்த கிளர்ச்சிக்கு பிறகு முதற் தடவையாக தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இலங்கை வாக்காளர்களுக்கு கிடைத்திருக்கிறது. கிளர்ச்சியின் விளைவாக நாட்டு மக்களின் அரசியல் சிந்தனையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்குமானால் அதை இந்த தேர்தல் நிச்சயம் பிரதிபலிப்பதாக அமையவேண்டும்.

முன்னைய ஜனாதிபதி தேர்தல்களைப் போலன்றி இந்த தடவை பிரசாரங்கள் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு முறைப்படி அறிவிப்பதற்கு பல மாதங்களுக்கு முன்னதாகவே தொடங்கி விட்டன. சஜித் பிரேமதாசவும் அநுரா குமாரவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக கடந்த வருடமே அறிவித்து தங்கள் பிரசாரங்களை முன்னெடுக்கத் தொடங்கினார்கள்.

ஆனால், ஜனாதிபதி விக்கிரமசிங்கவை பொறுத்தவரை தேர்தலில் போட்டியிடப் போவதாக கடந்தமாத பிற்பகுதியிலேயே அறிவித்தார். அவரது ஐக்கிய தேசிய கட்சி பலவீனமடைந்திருப்பதால் தன்னை தேர்தலில் ஆதரிக்கக்கூடிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதில் அவர் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

தனது கட்சியின் சார்பிலான வேட்பாளராக அன்றி பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து பிரிந்து வந்திருப்பவர்களை உள்ளடக்கிய ஒரு விசித்திரமான கதம்பக் கூட்டணி ஒன்றின் ஆதரவுடன் சுயேச்சை வேட்பாளராக அவர் போட்டியிடுகிறார். 32 அரசியல் கட்சிகள் குழுக்களை உள்ளடக்கிய கூட்டணி ஒன்று தொடர்பான உடன்படிக்கை கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் பிரதான அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் தேசியத் தேர்தல் ஒன்றில் சுயேச்சையாக போட்டியிடுவது இதுவே முதற்தடவையாகும்.

> **ராஜபக்ஷக்களை கைவிட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் தன்னுடன் இணைவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மகிழ்ச்சி அடையலாம்..ஆனால் அவர்கள் எல்லோரும் தனக்கு எவ்வளவு வாக்குகளை கொண்டுவருவார்கள் என்பது குறித்து அவர் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம்**

பொதுஜன பெரமுனவின் சார்பில் தனியான வேட்பாளரை களமிறக்குவதற்கு ராஜபக்சாக்கள் தீர்மானித்ததை அடுத்து அவர்களைக் கைவிட்டு அந்த கட்சியின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் பக்கத்துக்கு வந்து விட்டார்கள். அதனால் ஜனாதிபதி மகிழ்ச்சி அடைந்தாலும், அவர்கள் ஒவ்வொருவரும் தனக்கு கொண்டுவரக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கையைப் பற்றி உண்மையில் அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

தங்கள் தொகுதிகளில் மக்கள் மத்தியில் ஜனாதிபதிக்கு ஆதரவு அதிகரித்து வருவதன் காரணமாகவே அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்சாக்களை கைவிட்டு அவரை ஆதரிக்க முண்டியடிக்கிறார்கள் என்று சில அவதானிகள் கூறுகிறார்கள். ராஜபக்சாக்களின் அதிவிசுவாசிகளாக இருந்த அரசியல்வாதிகள் கூட தங்களது ஆதரவாளர்களின் வேண்டுகோளின் பிரகாரமே விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு தாங்கள் தீர்மானித்ததாக பகிரங்கமாகக் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி தனது பிரசாரத்தை முற்றிலும் வித்தியாசமான ஒரு தந்திரோபாயத்துடன் முன்னெடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. தன்னை அல்ல தேசத்தையே முன்னிலைப்படுத்தி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்போவதாக அவர் பிரகடனம் செய்திருக்கிறார்.

எவரையும் எதிர்த்து தேர்தலில் போட்டியிடவில்லை என்றும் மற்றைய வேட்பாளர்களைப் போலன்றி தனது எதிர்காலத்துக்காக அல்ல நாட்டின் எதிர்காலத்துக்காகவே போட்டியிடுவதாகவும் கூறும் அவர் தேர்தலில் வெற்றி பெற்றால் சகல கட்சிகளுடனும் சேர்ந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

"என்னுடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு பிரேமதாசவுக்கும் அநுரா குமாரவுக்கும் முன்னரும் நான் அழைப்பு விடுத்தேன். ஆனால் அவர்கள் அதை நிராகரித்துவிட்டார்கள். அதற்காக அவர்கள் இப்போது கவலைப்படக்கூடும். அடுத்த தடவை அவர்களை எந்த ஆட்சேபனையும் இல்லாமல் அரசாங்கத்திற்குள் கொண்டுவருவேன். அவர்களுக்கு மாத்திரமல்ல, பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான நாமல் ராஜபக்சவுக்கும் அழைப்பு விடுக்கிறேன்" என்று கடந்தவாரம் பத்திரிகை ஆசிரியர்களையும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களையும் சந்தித்தபோது ஜனாதிபதி கூறினார்.

தேர்தல் பிரசார மேடைகளில் பெரும்பாலும் அவர் எந்த வேட்பாளரையும் தாக்கிப் பேசப்போவதில்லை என்பது நிச்சயம் என்று தெரிகிறது. இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்து அபிவிருத்தியை நோக்கி வழிநடத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையே ஒரேயொரு மார்க்கம் என்று கூறும் அவர் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் தனது தலைமையிலான அரசாங்கம் கடந்த இரு வருடங்களாக முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடருவதற்கு தனக்கு அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஆணை தருமாறு மக்களை கேட்கிறார்.

மற்றைய பிரதான வேட்பாளர்களும் கூட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை எதிர்க்கவில்லை என்பதையும் சில திருத்தங்களுடன் அதையே தொடரப் போவதாகக் கூறுவதையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டுகிறார். புதிய வாக்குறுதிகளை அவர் வழங்கவில்லை. தற்போது செல்லும் பாதையில் தொடர்ந்து பயணிப்பதற்கே அவர் மக்களின் ஆணையைக் கோருகிறார். அத்துடன் கடந்த காலத்தைப் போன்று கட்சி அரசியல் செய்வதில் நாட்டம் காட்டாமல் சகல கட்சிகளும் ஆதரிக்கக்கூடிய ஒரு சுயேச்சை வேட்பாளராகவே தன்னை முன்னிறுத்தியிருக்கும் விக்கிரமசிங்க கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட புதிய ஒரு "அவதாரமாக" தன்னைக் காட்சிப்படுத்துகிறார்.

ஆழமான கட்சி அரசியல் போட்டா போட்டிகள் நிறைந்த அரசியல் கலாசாரத்தைக் கொண்ட இலங்கைச் சமுதாயத்தில் ஜனாதிபதியின் தற்போதைய அணுகுமுறை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் மக்கள் மத்தியில் அதற்கு எந்தளவுக்கு வரவேற்பு இருக்கும் என்பதும் முக்கியமான கேள்விகள்.

கடந்த வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் தங்களது நியமனப்பத்திரங்களை கையளித்த பிறகு மூன்று பிரதான வேட்பாளர்களும் ஆதரவாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துக்களை வெளியிட்டார்கள். (மறு பக்கம் பார்க்க)



# முன்னைய தேர்தல்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட அரசியல் கோலங்களுடன் 2024 ஜனாதிபதி தேர்தல்!



“இலங்கை மக்களுக்கு பிரகாசமான ஒரு எதிர்காலத்தை உருவாக்குவதற்காகவே நான் மக்களின் ஆணையை நாடி நிற்கிறேன். நாம் நாட்டைப் பொறுப்பேற்று உறுதிப்பாட்டைக் கொண்டு வந்தோம். உங்களுக்கு இப்போது உணவு,எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் கிடைக்கின்றன. இது ஒரு தொடக்கம் மாத்திரமே. உறுதிப்பாடுடைய ஒரு தேசமாக இலங்கையை மாற்றுவதற்கு பெருமளவு பணிகளை செய்ய வேண்டியிருக்கிறது. நாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்று சட்டம் ஒழுங்கை நிவைநாட்டியிருக்காவிட்டால் பங்களாதேஷின் கதி இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும். அதனால் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒரு ஆணையைத் தருமாறு மக்களிடம் வேண்டுகிறேன்.

“நெருக்கடியான காலப்பகுதியில் நாட்டைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பயந்து ஓடினார்கள். அத்தகைய ஆட்களிடம் நாட்டைக் கையளிக்கப் போகின்றீர்களா இல்லையா என்பதை தீர்மானியுங்கள்” என்று ஜனாதிபதி கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தனது தந்தையார் பாணியில் பொதுமக்கள் யுகம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக சூளுரைத்தார்.

“பொதுமக்களின் யுகம் ஒன்றை உருவாக்குவதாக நான் உறுதியளிக்கிறேன். அபிவிருத்தியின் பயன்களை நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் அனுபவிக்கக் கூடிய சூழ்நிலையை நான் உருவாக்குவேன். எனக்கு ஆதரவாக அணிதிரளுமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்” என்று அவர் கூறினார்.

மக்களுக்கு மாற்றம் ஒன்று அவசியமாகத் தேவைப்படுகிறது என்று கூறிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார தங்களது முகாம் மாத்திரமே அத்தகைய மாற்றத்தை கொண்டு வரக்கூடிய வல்லமையைக் கொண்டது என்று குறிப்பிட்டார்.

“கடந்த காலத்தில் பெருமளவு தேர்தல்கள் நடத்தப்பட்ட போதிலும் கூட வருடக்கணக்காக மககள் சொல்லொணா இடர்பாடுகளை அனுபவித்தார்கள். இந்த தேர்தலில் எங்களால் வெற்றிபெற முடியும். துன்பங்களை அனுபவிக்கும் நிலைவரம் மாறவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். நாட்டையும் மக்களையும் இடர்பாடுகளில் இருந்து மீட்டெடுக்கக்கூடியதாக இந்த தேர்தலை எம்மால் மாற்றமுடியும். அதை எமது முகாமினால் மாத்திரமே சாதிக்கமமுடியும்” என்று அவர் கூறினார்.

நாமல் ராஜபக்சவை பொறுத்தவரை தனது அரசியல் எதிர்காலத்தை மனதிற் கொண்டு பொதுஜன பெரமுனவை மீளக்கட்டியெழுப்பும் ஒரு முயற்சியாகவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார். மக்கள் கிளர்ச்சியின் விளைவாக ராஜபக்ச குடும்பம் ஆட்சியதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டதற்கு பிறகு அந்த குடும்பத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறார் என்பதே நாமல் ராஜபக்சவின் பிரவேசத்தைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும்.

ராஜபக்ச குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும் இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி விக்கிரமசிங்கவை ஆதரிப்பதே அவர்களுக்கு இருக்கக்கூடிய சிறந்த தெரிவு என்று ஒரு கட்டத்தில் பரவலாக நம்பப்பட்டது. ஆனால் தங்களது எதிர்கால அரசியல் வாய்ப்புக்களை உறுதிசெய்யும் நோக்கில் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு ஜனாதிபதி திட்டவட்டமாக மறுத்துவிட்டதை அடுத்து பொதுஜன பெரமுனவின் சார்பில் தனியான வேட்பாளரை நிறுத்தும் முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

> **வழமையாக ஜனாதிபதி தேர்தல்களில் முக்கியத்துவம் பெற்றுவந்த சில அடிப்படைப் பிரச்சினைகள் இந்த தடவை பிரதான வேட்பாளர்களின் கவனத்தைப் பெறும் சாத்தியமில்லை. குறிப்பாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கைக்கு அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இடம் கிடைக்குமா?**

விக்கிரமசிங்கவுடன் முரண்படுவதற்கு முன்னதாகவே தங்களது கட்சியின் சார்பில் நிறுத்தப்படக்கூடிய வேட்பாளராக தொழிலதிபர் தம்மிக்க பெரேராவை முன்னிறுத்தியதன் மூலம் ஜனாதிபதியை பயமுறுத்தும் பாணியில் ராஜபக்சாக்கள் நடந்துகொண்டார்கள். தங்களுக்கு மக்கள் மத்தியில் தற்போது இருக்கின்ற செல்வாக்கை பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஒரு உரைகல்லாக தம்மிக்கவையும் அவரது பணத்தையும் பயன்படுத்தும் ராஜபக்சாக்களின் பிரயத்தனம் இறுதியில் பயனளிக்கவில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்று அவர் கடைசி நிமிடத்தில் அறிவித்தார். அதனால் வேறு வழியின்றி நாமல் ராஜபக்சவை களமிறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ராஜபக்சாக்களுக்கு ஏற்பட்டது.

தேர்தலில் போட்டியிடாவிட்டால் பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கி சிதறடிக்கப்பட்டுவிடும் என்றும் அதனால் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் அஞ்சிய ராஜபக்சாக்கள் கட்சியைப் பாதுகாப்பதற்காக நாமல் ராஜபக்சவை போட்டியிடவைத்திருக்கிறார்கள். ஆனால் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு மக்கள் வாக்களிக்கப் போகிறார்களா அல்லது பொதுஜன பெரமுனவை பாதுகாக்க வாக்களிக்கப் போகிறார்களா? போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக தங்களது தவறுகளைப் பொருட்படுத்தாமல் சிங்கள மக்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு விசுவாசமானவர்களாக இருக்கவேண்டும் என்ற விபரீதமான எண்ணம் ராஜபக்சாக்களிடம் நிலை கொண்டிருக்கிறது.

அதேவேளை, சாத்தியமானளவுக்கு கூடுதல்பட்ச வாக்குகளைப் பெறுவதற்காக ராஜபக்சாக்கள் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் உரிமைகளுக்கும் அபிலாசைகளுக்கும் எதிராக பெரும்பான்மையினவாத அணிதிரட்டலை மீண்டும் செய்வதில் நாட்டம் காட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மூன்று பிரதான வேட்பாளர்களும் தேர்தல் நோக்கங்களுக்காக என்றாலும், சிறுபான்மைச் சமூகங்களுக்கு நேசக்கரத்தை நீட்டுவதால் ராஜபக்சாக்களின் முயற்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் இந்த தடவை பெரிதாக எடுபடுவதற்கு வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது.

எதிர்காலத்தில் நாட்டுக்கு தலைமை தாங்கும் குறிக்கோளைக் கொண்ட இளம் அரசியல் தலைவரான நாமல் ராஜபக்ச தனது குடும்பத்தின் மூத்தவர்களைப் போலன்றி இனவாதமற்ற அரசியல் பாதையை தெரிவுசெய்தால் ஆரோக்கியமானதாக இருக்கும். அவ்வாறு தன்னை மாற்றிக் கொள்வதற்கு முன்வருவாரா? குறைந்தபட்சம் அரசிய லமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆரோக்கியமான ஒரு நிலைப்பாட்டை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிப்பதன் மூலம் இனங்களுக்கு இடையிலான உறவுகள் தொடர்பான தனது சிந்தனையை அவர் வெளிக்காட்ட முடியும்.



ஜனாதிபதி தேர்தலில் 23 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் 16 சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிடுகிறார்கள். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொனசேகா, முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச போன்ற முன்னணி அரசியல்வாதிகளும் அவர்களில் அடங்குவர். ஜனாதிபதியாக தெரிவாவதற்கு அல்லாமல் வேறு நோக்கங்களுக்காகவே அவர்கள் போட்டியிடுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெருவாரியான சுயேச்சை வேட்பாளர்களைப் பொறுத்தவரையிலும் கூட நிலைமை அதுவே.

“அறகலய” மக்கள் கிளர்ச்சியில் முன்னரங்கத்தில் நின்ற செயற்பாட்டாளர்களால் ஒரு பிரிவினரால் அமைக்கப்பட்ட “ மக்கள் போராட்டக் கூட்டணி “ என்ற இயக்கத்தின் சார்பில் நுவான் போபகே என்ற சட்டத்தரணி தேர்தலில் போட்டியிடுவதும் கவனிக்கத்தக்கது.

வழமையாக ஜனாதிபதி தேர்தல்களில் முக்கியத்துவம் பெற்றுவந்த சில அடிப்படைப் பிரச்சினைகள் இந்த தடவை பிரதான வேட்பாளர்களின் கவனத்தைப் பெறுவது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. குறிப்பாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கைக்கு அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இடம் கிடைக்குமா என்று தெரியவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பொறுத்தவரை 13 வது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பொலிஸ், காணி போன்ற முக்கிய அதிகாரங்கள் குறித்து தெளிவற்ற நிலைப்பாடுகளுடன் கூடிய அறிவிப்புக்களை தவிர வேறு எதையும் பிரதான வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களில் எதிர்பார்க்க முடியாது.

இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு சமஷ்டி அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு தயாராக இருப்பதாக தென்னிலங்கையின் எந்த வேட்பாளராவது உறுதியளித்தால் அவரை ஆதரிப்பது குறித்து பரிசீலிக்க முடியும் என்று கூறும் அரசியல்வாதிகளும் வடக்கில் இருக்கிறார்கள். இன்றைய அரசியல் நிலைவரங்கள் குறித்த அவர்களது புரிதலின் இலட்சணம் அது.

இது இவ்வாறிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற புதிய அமைப்பினால் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு ஆரம்பத்தில் இருந்தே தமிழ்ப்பொது வேட்பாளராக நியமிக்கப்படக்கூடியவருக்கு இருக்கவேண்டியவை என்று வரையறுத்த தகுதிகள் சகலவற்றுக்கும் முரணாக அரியநேத்திரனின் நியமனம் இடம்பெற்றது.

அரியநேத்திரன் தமிழ்த் தேசிய அரசியல் அபிலாசைகளின் ஒரு குறியீடே தவிர வேறு ஒன்றுமில்லை என்று அவரை நியமித்தவர்கள் கூறுகிறார்கள். அவரும் தனது குறியீட்டுக் கடமை தேர்தல் தினத்துடன் முடிந்துவிடும் என்று கூறுகிறார். அதனால் அவரைப் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அவரை நிறுத்தியவர்கள் தேர்தல் பிர சாரங்களை எவ்வாறு முன்னெடுக்கப் போகிறார்கள்? தேரதலுக்கு பிறகு என்ன செய்யப் போகிறார்கள்? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# கல்லோடைக் கந்தன் தேரேறி வருகிறான்!

**மதுரகவி
காரை, எம்.பி. அருளானந்தன்**

ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல் வடபால் செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. அன்ன தானக் கந்தனாக தொண்டமனாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்து வருகின்ற சந்நிதிக் கந்தனுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவாகும்.

இன்றைய தேர்த் திருவிழாவிலே ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும், வேற்று நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் செல்வச் சந்நிதியில் கூடுகின்ற கண்கொள்ளாக் காட்சியைக் காணமுடிகின்றது.

கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும், மாவட்ட புரத்தில் அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண் டிருக்கின்ற முருகப்பெருமான் செல்வச் சந்நிதியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங் கரையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டமனாறு என்னும் புராதான நகரம் உண்டு. கருணாகரத் தொண்டமான் எனும் சிற்றரசருடன் தொடர்பு முண்ட நகரம் இந்தப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டமான் ஆற்றங்கரையில் சுழி முகத்துக்கு அண்மையில் செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் அமைந்துள்ளது. செல்வச்



சந்நிதி ஆலயம் சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. கோயில் சூழலில் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருதமரக் காடும் பாக்கு நீரிணைக் கடலும் மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே இருக்கும் வல்லை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும்.

செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். இந்த ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் கதிர்காமத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம்பெறுவதில்லை. வேறு எந்தக் கோயிலிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படுகின்றது. கதிர்காமத்து கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் கதிர்காமத்து தீர்த்தத் திருவிழாவன்று சந்நிதி திரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒருநாள் இரவு முருகன் பூசாரியார் கதிர்காமரை நித்திரையிலிருந்து எழுப்பி அப்பா! நான் பாத யாத்திரையாக வந்தமையால் பசி, தாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்குக் கொடு என்று கேட்டாராம்.

கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்வேளை எங்கு போவேன் என்று மனம் நொந்தார். உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயற்றை துவைத்து இளநீரும் தா என்று கேட்டு வாங்கி முருகன் திருவமுது செய்தார்.

இன்றும் அவ்விதமாக பயற்றம் உருண்டையும், இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வருகின்ற முருகனுக்கு பூசைக்கு படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது.

செல்வச் சந்நிதி சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையிலே இருக்கின்றன. அந்தக் காலங்களில் அம் மடங்களிலே அடியார்கள் தங்கவும் அன்னதானம் நிறைவேற்றவும் வசதியாக அமைந்தன.

இன்றும் சந்நிதியான் ஆச்சிரமங்கள், ஆனந்தா ஆச்சிரமம் போன்ற மடங்கள் அப்பணியை நிறைவேற்றி வருகின்றன.

சந்நிதி பூசை நேரங்களில் ஒலிக்கும் பறை மேளம் அன்பர்களை பரவசப்படுத்தும் நிறைந்த கர்ப்பூர ஒளியிலும் செறிந்த புகை மண்டல நடுவிலே மின்னல் போல ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப் படாதார் எவருமில்லையென்றே கூறலாம்.

சந்நிதி மூலஸ்தானத்தில் வேலே காட்சியளித்து எம்மை ஆட்சி செய்கின்றது.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!

---



## வியுக்தியர் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**தி. துஷியந்தன்,
இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை கையளிக்க வேட்பாளர்கள் அனைவரும், தேர்தல் திணைக்களத்தில் ஒன்று கூடியிருந்தபோது, அங்கே சஜித் பிரேமதாசாவிற்கு எதிரே போன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரை நோக்கி கைலாகு கொடுப்பதற்காக கைகளை நீட்டியபோது, கதிரையில் அமர்ந்திருந்தவாறே, சஜித் இரு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்தியபோது ரணிலும் பதிலுக்கு வணக்கம் செலுத்திவிட்டு நகர்ந்ததாக ஒரு செய்தி பார்த்தேன். இந்தச் செய்தியை நீங்களும் படித்திருப்பீர்கள் தானே. அப்போது உங்களுக்கு என்ன தோன்றியது.?

**வியுக்தியார்:** நான் சஜித் பிரேமதாசாவாக இருந்திருந்தால், உடனே கதிரையிலிருந்து எழுந்து, அவருக்கு கைலாகு கொடுத்துவிட்டு, அவர் முன்னே குனிந்து 'தேர்தலில் நான் வெற்றியடைய என்னை வாழ்த்துங்கள்" என்று கேட்டிருப்பேன். சில சிங்கள நண்பர்களின் வீடுகளுக்கு செல்கின்றபோது, அந்த நண்பர்களின் பிள்ளைகள் (அவர்கள் வாலிபர்களாக இருந்தாலும்) உடனே நம் எதிரே வந்து குனிந்து நம்மிடம் ஆசிபெறுகின்ற கலாசாரத்தை பார்த்து வியந்திருக்கின்றேன். அந்த கலாசாரம்தான் எனக்கு மனக்கண்ணில் தோன்றியது.

---

**எஸ். சிவராமகிருஸ்ணன்,
வெள்ளவத்தை, கொழும்பு 6.**

**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலில் முன்னர் எப்போதும் இல்லாததுபோல முப்பத்தி ஒன்பது வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆனாலும் போட்டி என்னவோ, மூவர் அல்லது நால்வருக்கு இடையில்தான் இருக்கப் போகின்றது. இப்படி அதிகமானவர்கள் போட்டியிடுவது பிரதான வேட்பாளர்களுக்கு சாதகமாக இருக்குமா அல்லது பாதகமாக இருக்குமா?

**வியுக்தியார்:** மூன்று அல்லது நான்கு வேட்பாளர்கள் முக்கிய வேட்பாளர்களாக இருப்பதால், யாருமே ஐம்பது வீத வாக்குகளைப் பெறப்போவதில்லை. இந்த ஐம்பது வீதம் என்பது மற்றயை முப்பத்திஐந்து வேட்பாளர்களுக்கும் கிடைத்த வாக்குகளையும் சேர்த்துத்தானே. அப்படி ஐம்பது வீதத்தை யாரும் எடுக்காதபோது, இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கை நடக்கும். அப்போது முதல் இருவருக்குமிடையில்தான் போட்டி இருக்கும். மற்றயவர்களுக்கு கிடைத்த வாக்குச்சீட்டுக்களில் யாரைவது தமது இரண்டாவது தெரிவாக அந்த இருவரில் ஒருவருக்கு வாக்களித்திருக்கிறார்களா என்று எண்ணப்படும். அப்போது இந்த இரண்டாவது தெரிவுதான் ஜனாதிபதியை தீர்மானிக்கவிருக்கிறது. இப்போது வேட்பாளர்கள், வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக என்றாலும் உங்கள் இரண்டாவது வாக்கையாவது தனக்கு தாருங்கள் என்று கேட்கப் போகின்றார்கள். நமது வாக்காளர்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாகவும் இருக்கலாம். அதற்காக இது சாதகமா? பாதகமா என்பதை முடிவு வெளிவந்த பின்னர் தான் அறியலாம். உதாரணமாக இரண்டாவதாக முதல் எண்ணிக்கையில் வந்தவர், இரண்டாவது எண்ணிக்கை யில் முதலாவதாக வந்தால் அவருக்கு அது சாதமானது தானே.

---

**கே. ரமணன்,
மாமாங்கம், மட்டக்களப்பு.**

**கேள்வி:** பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரது தலைமையில் உருவாக்கப்படும் அரசாங்கத்தில் பிரத மர் பதவி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கே வழங்கப்படும் என ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அந்த உதயங்க வீரதுங்கவிற்கு ஏன்தான் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனவோ தெரியவில்லை. நீங்கள் வேறு அவர் கதைக்கு என்னிடம் கருத்துக் கேட்கிறீர்களே. இவர் முன்னாள் தூதுவர் மாத்திரமல்ல, ராஜபக்ச குடும்பத்தில் ஒருவர்தான். ஆனால் ஒவ்வொரு குடும்பத்திலும் இதுபோன்ற ஒரு நகைச் சுவையாளர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனாலும் அவர் சொல்வதிலும் நியாயம் இல்லாமல் இல்லையே. நாமல் தெரிவுசெய்யப்பாட்டால் என்று தான் சொல்கிறார். உண்மைதான் அவர் தெரிவுசெய்யப்பட் டால் இன்று அவர்களுடன் இருப்பவர்களில் ஜோன்ஸ்டன் தானே மூத்த அரசியல்வாதி. அவரைத்தானே பிரதமராகவும் நியமிக்கவேண்டும்.

---

**கந்தசாமி நிதர்சன்
தவசிகுளம், கொடிகாமம்.**

**கேள்வி:** ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத் தொடரின் முதலாவது கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருப்பதும், அந்தக் கூட்டத்திற்கு உதய கம்பன்பிலவை அழைத்து வந்திருப்பதும் எதற்காக என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?.

**வியுக்தியார்:** திலித் ஜயவீர தெற்கில் ஒரு பெரிய தொழில் அதிபர் மட்டுமல்ல, பெரிய ஊடக நிறுவனம் ஒன்றினதும் அதிபர். கோட்டபாயவின் வெற்றிக்கு பின்னால் இருந்த முக்கியமான நபர் அவர். அவரை கிழக்கு மாகாண தொல்லியல்ஆணைக்குழுவிற்கு உறுப்பினராக கோட்டா நியமித்தபோது அதன் பின்னணி புரியாமல் இருந்தது. இப்போது அவர் கம்பன்பில, விமல்வீரவன்ச அணியுடன் கைகோர்த்திருப்பது தெற்கில் யாருடைய வாக்குகளை இலக்கு வைத்து என்பதை அறிய அதிகம் ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லையே. அவர் ஏன் யாழ்ப்பாணத்தில் பிரச்சாரத்தை தொடக்கினார் என்றால், யாழ்ப்பணத்தையும் பௌத்த பூமி ஆக்கிக்காட்டுகின்றேன் என்று தெற்கில் பிரச்சாரம் செய்வதற்காகவோ என்றும் நினைக்கத் தோன்றுகின்றது.

---

**நடராஜா விஸ்வா,
கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:** "ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் சமமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது, ஒரே நாடு ஒரே சட்டம் என்பதே எமது முகாமின் கொள்கை." - என்று பொது ஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளாரே?. இவர்கள் திருந்துவதற்கே இடமில்லையா?

**வியுக்தியார்:** அட மொக்கங்களா, என்ன வடக்கு கிழக்குக்கு மட்டுமா பொலிஸ் அதிகாரம் கேட்கிறோம். ஒன்பது மாகாணங்களுக்கும் தானே பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்கிறோம். கிழக்கு மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால், அங்கும் முப்பது வீதமானவர்கள் சிங்களப் பொலிசார்தானே கடமையில் இருப்பார்கள். இப்படியே சொல்லிக்கொண்டிருந்தால்தான் நீங்கள் அரசியல் செய்யலாம் என்றால் என்னதான் செய்வது. அவர்கள் திருந்தவே போவதில்லை.

---

**க. லோசன்,
பெரியகல்லாறு.**

**கேள்வி:** அதிகார பகிர்வு தொடர்பில் தென்னிலங்கை வேட்பாளர்களுடன் பேரம் பேசுவதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம் என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தன்னிடம் தெரிவித்தார் என்று சுமந்திரன் எம். பி. கூறியுள்ளாரே.

**வியுக்தியார்:** அதுதான் ஒவ்வொரு வேட்பாளர்களும் தத்தமது யோசனைகளை சொல்லிவிட்டார்களே. இனி பேரம்பேசுவதற்கு என்ன இருக்கின்றது என்று தூதுவரிடம் அவர் கேட்டிருக்கவேண்டியதுதானே.

# வரலாற்றில் ‘கூர்ஸ்க்’ போர்க்களம்:

# டாங்கிப் போரில் வென்ற சோவியத் படை!


# ஊடுருவி ரஷ்யாவில் உள்நுழைந்த உக்ரேன் படை!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இரண்டாம் உலகப் போரில் சோவியத் படைகள், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துடன் கூட்டு சேர்ந்து, நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாக தோற்கடித்த போரே கூர்ஸ்க் (முரசளம) போராகும்.

தற்போது உக்ரேனிய ஊடுருவலால் தாக்கப்பட்ட கூர்ஸ்க் தாக்குதலை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகங்கள் பாரியளவில் பாராட்டியுள்ளன.

எண்பத்தொரு ஆண்டுகளுக்குப் முன்பு அதே நிலப்பரப்பின் ஒரு பகுதியில் ரஷ்யாவிற்கு எதிராக ஏவி விடப்பட்ட ஜேர்மன் கவச வாகனங்கள் அமெரிக்க வாகனங்களுடன் இணைந்து, ரஷ்யாடன் சண்டையிட்டு வருகின்றன என்பது தான் இன்றைய நிலையாகும்.




**கூர்ஸ்க் டாங்கி போர் 1943**

கூர்ஸ்க் டாங்கி போர் என்பது 1943 கோடையில் தென்மேற்கு ரஷ்யாவில் நாஜி ஜெர்மனியுடன்- சோவியத் யூனியனின் படைகளுக்கு இடையேயான இரண்டாம் உலகப் போரின் கிழக்கு முன்னணிப் போராகும்.

இதன் இறுதி விளைவாக சோவியத்துக்கு வெற்றி கிடைத்தது. கூர்ஸ்க் போர் என்பது போர் வரலாற்றில் மிகப் பெரிய டாங்கிப் போராகும். இப்போருக்கு முன்னர் நடந்த ஸ்டாலின் கிராட் போருடன், ஐரோப்பியப் போரின் அரங்கில் குறிப்பிடப்பட்ட இரண்டு திருப்பு முனைகள் ஏற்பட்டன.




இரண்டாம் உலகப் போரின் கடுமையான போர்களில் ஒன்றாக கருதப்படுவதுடன், வரலாற்றில் மிகப் பாரிய கவசப் போராகும். இப் போரின் தொடக்க நாளான ஜூலை 5, இல் வரலாற்றில் மிகவும் கடுமையான வீட்டிற்கு வீடு சண்டை மற்றும் கைக்கு - கை சண்டை போராக இப்போர் குறிக்கப்படுகிறது.

**நேட்டோ ஆதரவில் உக்ரேன்:**

தற்போதய கூர்ஸ்க் தாக்குதல் வாஷிங்டனில் நடந்த நேட்டோ உச்சிமாநாட்டிற்குப் பின் நிகழ்ந்துள்ளது. இது நேட்டோவின் கீழ் உக்ரேனுக்கான மேற்கத்திய ஆதரவினையும், ஆயுத தளவாட வழங்கலை மறுசீரமைத்துள்ளமை தெரிகிறது.

அத்துடன் நூறாயிரக்கணக்கான நேட்டோ துருப்புக்களை முழு அளவிலான போரில் ஈடுபடுத்துவதற்கான ஒரு உயர்நிலை தயார்நிலையில் வைக்க நேட்டோவின் படைகளை மறுசீரமைப் பதற்கான தொலைநோக்கு திட்டங்களை யும் தற்போது செயல் படுத்தி வருகிறது.

அமெரிக்க பாதுகாப்புத் துறை உக்ரேனுக்கு மேலும் 125 மில்லியன் டொலர்கள் ஆயுதங்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது. போர் ஆய்வுக்கான பயிலகத்தின் கூற்றுப்படி, 155 மிமீ மற்றும் 105 மிமீ பீரங்கி வெடிமருந்துகள் ஸ்டிங்கர் ஏவுகணைகள் மற்றும் ஏரி-4 டாங்கி எதிர்ப்பு அமைப்புகள் ரொக்கட் ஏவிகள், ஒளியியல் - கண்காணிப்பு டாங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுக ணைகள் பல்நோக்கு ரேடார்கள், பல் நோக்கு சக்கர வாகனங்கள் சிறிய ஆயு தங்கள், வெடிமருந்துகள் மற்றும் கூடுதல் ஆயுத உபகரணங்கள் மற்றும் வெடி மருந்துகள் என்பன அவற்றில் அடங்குகின்றன.

> எண்பத்தொரு ஆண்டுகளுக்குப் முன்பு கூர்ஸ்க் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் ரஷ்யாவிற்கு எதிராக ஏவி விடப்பட்ட ஜேர்மன் கவச வாகனங்கள் அமெரிக்க வாகனங்களுடன் இணைந்து, உக்ரைன் சண்டையிட்டு வருகின்றது என்பது தான் இன்றைய நிலையாகும்

**கூர்ஸ்க்கில் மிகப் பெரிய ஊடுருவல்:**

கடந்த 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை, உக்ரேனிய படைகள் ரஷ்ய பிராந்தியத்திலுள்ள எல்லைப் பகுதியான கூர்ஸ்க்கில் மிகப் பெரிய ஊடுருவலைத் தொடங்கின. ரஷ்ய இராணுவ அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த தாக்குதலில் உக்ரேனிய ஆயுதப் படைகளின் ஒரு பிரிவிலுள்ள 1,000ம் துருப்புக்களுடன்,



ஏழு டாங்கிகள் உட்பட 50 கவச வாகனங்கள் ஈடுபட்டன.

ரஷ்ய - உக்ரேனிய துருப்புக்களுக்கு இடையே மோதல்கள் எல்லைக்கு வடக்கே 7 கிலோமீட்டர் வரை நடந்தன. ஐரோப்பாவிற்கு விநியோகிக்கப்படும் ரஷ்ய எரிவாயு வழங்கும் சுட்ஜா நகரில் உள்ள ஒரு எரிவாயு அளவீட்டு நிலையத்தை உக்ரேனிய துருப்புக்கள் குறிவைத்துள்ளன என்றும் தெரிவித்தன.

ஆயினும் புதன்கிழமை மாலைக்குள் இந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக ரஷ்ய அரசாங்கம் அறிவித்தது. இருப்பினும், கூர்ஸ்க் பிராந்தியத்தில் அவசரகால நிலை இன்னும் நடைமுறையில் உள்ளது.

**ரஷ்யாவால் தாக்குதல் முறியடிப்பு:**

அப்பகுதியை இலக்கு வைத்து உக்ரேனிய ஆயுதப் படைகள் நடத்திய குறைந்தது ஏழு ஏவுகணைகளை ரஷ்ய வான் பாதுகாப்பு ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தின.

ஆறு குழந்தைகள் உட்பட 31 குடிமக்கள் காயமுற்றிருப்பதை ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இறந்தவர்களின் உத்தியோகபூர்வ எண்ணிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், ரஷ்ய ஊடகங்கள் பல துணை மருத்துவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்தன.

**நேட்டோ ரஷ்யா நேரடி மோதல்:**

உக்ரேனிய ஊடுருவலுக்கு அமெரிக்கா, நேட்டோ ஆயுதங்களைக் கொண்டு ரஷ்யாவை இலக்கில் வைத்துள்ளது. இந்த தாக்குதலில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது.

ரஷ்ய விமானத் தளங்கள் மற்றும் ரஷ்யாவிற்குள் ஆழமான பிற இலக்குகளைத் தாக்க அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரேனுக்கு அது இன்னும் அனுமதி வழங்கவில்லை.

கடந்த மே மாதம், இங்கிலாந்து வெளியுறவு மந்திரி டேவிட் கேமரூன் ராய்ட்டர்ஸிடம், பிரிட்டன் வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் ரஷ்ய எல்லையைத் தாக்க பயன்படுத்தலாம் என்று கூறினார்.

ஏப்ரல் மாதம், பைடென் நிர்வாகம் 190 மைல்களுக்கும் அதிகமான தூரத்தில் தாக்கும் திறன் கொண்ட நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேனுக்கு ரகசியமாக அனுப்பியதை உறுதிப்படுத்தியது. இந்த ஆயுதங்களை பயன்படுத்தி கடந்த மே மாதம் கிரிமியாவில் உள்ள விமானப் படை தளம் மீது உக்ரேன் தாக்குதல் நடத்தியது. அசோவ் கடல் பகுதியில் உள்ள பெர்டியன்ஸ்க் துறைமுகத்தைத் தாக்கவும் இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்கா ரகசியமாக ஆயுதங்களை வழங்கியதை உறுதிப்படுத்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், மார்ச் மாதத்தில், அவைகள் இப்போது உக்ரேனில் உள்ளன, சில காலமாக உக்ரேனில் உள்ளன என்று கூறினார்.

ஜூலை மாதம் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், ரஷ்ய எல்லைக்குள் “எங்கும்” தாக்க அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்த உக்ரேனை அமெரிக்கா அனுமதிக்கிறது என்று வலியுறுத்தினார்.

இன்றுவரை, ரஷ்யாவிற்குள் ஆழமான தாக்குதல்களை நடத்த அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நீண்ட தூர ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. எவ்வாறிருப்பினும், கூர்ஸ்க் தாக்குதல் மீதான தற்போதைய ஊடக பிரச்சாரம் மீண்டுமொருமுறை உக்ரேனை உசுப்பேத்தி விடும் உத்தியாகவே கருதப்படுகிறது.



# புத்தளத்தில் மினி சூறாவளி!

புத்தளம், ஓக. 18

புத்தளம் மாவட்டத்தில் பல பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மழையுடனான மினி சூறாவளி காற்றால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், பொதுக் கட்டடங்களின் கூரைகளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 10. 30 மணியளவில் திடீரென இடியுடன் கடும் மழை பெய்ததுடன், மினி சூறாவளி காற்றும் வீசியது.

இடியுடன் கூடிய கடும் மழை காரணமாக புத்தளத்தின் அனைத்து பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

மினி சூறாவளி காற்று காரணமாக பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியில் இருந்த பல மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பாலாவி, கரம்பை பகுதியில் பிரதான வீதியோரத்தில் நின்ற பெரிய மரமொன்று முறிந்து பிரதான வீதியின் நடுவே வீழ்ந்ததில் அந்த வீதியூடான போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.



மேலும் , மினி சூறாவளி காரணமாக கரம்பை தேத்தாப்பொல ஐயனார் ஆலயத்துக்கு அருகாமையில் இருந்த பெரும் மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் அந்த ஆலயத்தின் கூரை பகுதியளவில் சேதமடைந்ததுடன், ஆலயத்தின் பிரதம குருக்கள் குடும்பத்துடன் தங்கிருந்த வீட்டின் கூரையும் பகுதியளவில் சேதமடைந்தது.


நேற்று முன்தினம் இரவு ஐயனார் ஆலயத்தில் வரலக்ஷ்மி பூஜை நடைபெற்றதுடன், அந்தப் பூஜையில் பெருமளவு பக்தர்கள் கலந்துகொண்டிருந்ததாகவும், பூஜை வழிபாடுகளை அடுத்து பக்தர்கள் தமது வீடுகளுக்கு சென்றதன் பின்னரே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ லிங்கேஸ்வர சர்மா தெரிவித்தார்.

(எ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## இதுவரை 16 மரணங்கள் பதிவு

கொழும்பு, ஓக. 18



நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 34 ஆயிரத்து 906 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14, 248 ஆகும்.

இதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து 8,452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 16 டெங்கு மரணங்கள் பதிவாகின.

இதனால், பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச் சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

(எ)

# சட்டவிரோதமாக கொண்டு வந்த 6,000 சிகரெட்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 18

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட சிகரெட்களுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 6,000 சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(எ)

# சென்னை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடலோரங்களில் ஆண் டுக்கு ஆண்டுக்கு 0.31 செ.மீ. என்ற விகிதத்தில் கடல் மட்ட உயர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது."

சென்னையில் ஒரு சதுர கிலோமீட்ட ருக்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 24, 000ஐ தாண்டுவதாக மக்கள் தொகை தரவுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், தொடர்ந்து விரிவடைந்துகொண்டே இருக்கும் தலைநகரில் அதிதீவிர நகரமய மாக்கல், கடற்கரை பகுதிகளில் அதிகபட்ச பாதிப்புகளை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

காலநிலை நெருக்கடியை விரைவு படுத்தும் காரணிகளால் ஏற்படும் பாதிப்புகளுடன் "சென்னை பெருத்துக் கொண்டிருப்பதற்கு" தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார் கோ.சுந்தர்ராஜன்.

இப்படிப்பட்ட தாழ்வான கடலோர நகரங்கள், கடல் மட்ட உயர்வால் தீவிரமாகப் பாதிக்கப்படும் என்று பல்வேறு ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள் ளன. மேலும், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வு மையத்தின் ஆய்வில், பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 15 நகரங்களில், இத்தகைய நெருக்கடிக ளால் எளிதில் பாதிக்கப்படும் அபாயத்தில் சென்னை, மும்பை நகரங்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளன.

# 2024 இலங்கை ஜனாதிபதி தேர்தல்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

2015-ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ தோல்வியடைந்ததை அடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலி ருந்து பிரிந்த மஹிந்த ராஜபக்ஸ தரப்பி னர், மொட்டு சின்னத்திலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்திருந் தனர்.

இந்த மொட்டு சின்னத்தில் 2019-ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஸ, வரலாற்றில் அதிகப்படியாக வாக்குகளினால் இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தார்.

இந்தநிலையில், கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சி இடைநடுவில் கவிழ்ந் ததை அடுத்து, அவர்களின் ஆதரவுடனேயே ரணில் விக்ரமசிங்க ஆட்சி அமைத்திருந் தார்.

எனினும், இம்முறை தேர்தலில் ரணில் விக்ரமசிங்க சுயேச்சையாக கள மிறங்கியதை அடுத்து, நாமல் ராஜபக்ஸ மொட்டு சின்னத்தில் போட்டியிடுகின் றார்.

**சரத் பொன்சேகா**

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் காலப் பகுதியில் ராணுவ தளபதியாக பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இரண்டாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஸவிற்கு எதிராக வரலாற்றில் முதல் தட வையாக பொது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் அப்போது களமிறக்கப்பட்டார்.

இதன்படி, முதல் தடவையாக 2010-ஆம் ஆண்டு சரத் பொன்சேகா போட்டியிட்டு, இரண்டாவது இடத்தை தனதாக்கிக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் சரத் பொன்சேகா, அந்த கட்சி யிலிருந்து பிரிந்து இம்முறை தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுகின்றார்.

முன்னாள் அமைச்சராக கடமையாற்றிய விஜயதாஸ ராஜபக்ஸ, அமைச்சு பதவியை துறந்த நிலையில் இம் முறை ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக போட்டியிடுகின்றார்.

இலங்கையின் பிரபல தொழிலதிபரான திலித் ஜயவீர இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக போட்டியிடுகின்றார்.

இடைக்கால ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப் பட்டதை அடுத்து, அந்த கட்சியிலிருந்து பிரிந்த உறுப்பினர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கூட்டணியில் திலித் ஜயவீர களமிறக்கப் பட்டுள்ளார்.

**முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்கள்**

2024-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு முன்னாள் ஜனாதி பதிகளின் புதல்வர்கள் போட்டியிடு கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 1988 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வராக சஜித் பிரேமதாஸ இம் முறை தேர்தல் போட்டியிடுகின்றார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி யான மஹிந்த ராஜபக்ஸவின் புதல்வ ரான நாமல் ராஜபக்ஸ இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றார்.

**ஐந்து சிறுபான்மை வேட்பாளர்கள்**

இம்முறை தேர்தலில் மூன்று தமிழர்களும், இரண்டு இஸ்லாமியர்களும் போட்டியிடுகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற அடிப்படையில் பா.அரியநேத்திரன் போட்டியிடு கின்றார்.

அத்துடன், இந்திய வம்வாவளித் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் போட்டியிடு கின்றார்.

அத்துடன், அருணலு மக்கள் முன் னணி சார்பில் கே.ஆர்.கிரிஷான் போட்டியிடுகின்றார்.

மொஹமட் இல்லியாஸ், மற்றும் அபுபக்கர் மொஹமட் இன்பாஸ் ஆகி யோர் முஸ்லிம்களைப் பிரதிநிதித்து வப்படுத்திப் போட்டியிடுகின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவரைத் தேர்வு செய்வதற்காக இது வரை நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல்களில் அதிகளவிலான சிறுபான்மை வேட்பா ளர்கள் போட்டியிடும் முதலாவது சந்தர்ப்பம் இது வாகும்.

**அதிக தடவைகள் போட்டியிடும் வேட்பாளர்**

2005ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சி யாக ஐந்தாவது தடவையாகவும் சிறி துங்க ஜயசூரிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

2005, 2010, 2015, 2019 தேர்தல்களில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிய சிறிதுங்க ஜயசூரிய ஐந்தாவது தடவை யாகவும் 2024-ஆம் ஆண்டு தேர்த லில் போட்டியிடுகின்றார்.

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவான தடவைகள் போட்டியிட்ட வேட்பாள ராக சிறிதுங்க ஜயசூரிய விளங்குகின்றார்.

**பெண் வேட்பாளர்களே இல்லாத தேர்தல்**

இலங்கையில் இரண்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக 1988-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதல் தடவையாகப் பெண் வேட்பாளர் என்ற அடிப்ப டையில் சிறிமாவோ பண்டாரநாயக்க போட்டியிட்டார்.

இந்தத் தேர்தலில் ரணசிங்க பிரேமதாஸ வெற்றியீட்டியிருந்ததுடன், சிறிமாவோ பண்டாரநாயக்க தோல்வியைத் தழுவினார்.

இன்றும் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை கொண்டவராக சிறிமாவோ பண்டார நாயக்க விளங்குகின்றார்.

போராட்டத்தை நடத்திய இளைஞர், யுவதிகளின் ஆதரவுடன் நுவன் சஞ்ஜீவ போபகே களமிறங்கியுள்ளார்.

**அதிகளவான வேட்பாளர்கள் போட்டியிடும் முதல் சந்தர்ப்பம்**

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவிலான வேட்பாளர்கள் போட்டியிடும் முதலாவது சந்தர்ப் பம் இதுவாகும். கடந்த ஆண்டு 35 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலை யில், இம்முறை 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதையடுத்து, இலங்கையில் முதல் தடவையாக அதிகளவிலான வேட்பாளர்களுடனான வாக்குச்சீட்டு இம்முறை அச்சிடப்படவுள்ளது.

இதன்படி, வாக்குச்சீட்டை அச்சிடும் விதம் குறித்து தமது ஆணைக்குழு, அரச அச்சகத் திணைக்களத்துடன் கலந்துரை யாடித் தீர்மானிக்கும் என ஆணைக்குழு வின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவிக்கின்றார்.

இவ்வாறான நிலையில், வேட்பாளர்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தீவிர மாகவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேர்தல் 2024-ஆம் ஆண்டு செப்டம் பர் மாதம் 21-ஆம் தேதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் ஒரு கோடியே 71 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

## இனப்பிரச்னையை...

தீர்க்காவிடின் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.இனப்பிரச்னை இருந்தது, அதனை தீர்த்தாலேயே சிங்கப்பூரை கட்டியெழுப்ப முடிந்தது என லீ குவான் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் எம்மிடம் இல்லை. தாய்நாடு முக்கியம். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற வைக்கும்வரை ஓயமாட்டேன். செப்ரெம்பர் 21 ஆம் திகதி அவர் நிச்சயம் ஜனாதிபதியாவார்- என்றார். (அ)

## அரசியலில்...

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாகவே ஜனநாயக இடதுசாரி முன்னணிக்கு புதிய தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரேஷன் பிரேமரத்ன அண்மையில் நியமிக்கப்பட்டார்.

தனது உடல்நிலையைக் கருத்திற்கொண்டே வாசுதேவ நாணயக்கார, அரசியலுக்கு விடை கொடுக்கும் முடிவை எடுத்துள்ளார். இதன்படி அடுத்த பொதுத் தேர்தலிலும் அவர் போட்டியிடமாட்டார். (அ)

## பிரபாகரனின்...

தீர்க்கமானதாக அமையலாம்.

வேலுப்பிள்ளை பிரபாகரனை முதலில் படம்பிடித்தவன் நான், நானே அவரின் முகத்தை உலகிற்கு முதலில் தெரியப்படுத்தினேன்

1982ம் ஆண்டு மெட்ராசில் ஒரு துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தகவல் வந்தது. அவர்கள் யார் என்பது அவ்வேளை எனக்கு தெரியாது.

அந்த துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

அவரை அதுவரை எவரும் பார்த்ததில்லை . அவரது புகைப்படங்கள் எதுவும் அதுவரை இருக்கவில்லை. இலங்கையின் புலனாய்வாளர்களிடம் கூட அவரின் புகைப்படம் இருக்கவில்லை. அவரை கைவிலங்குடன் நான் படமெடுத்தேன்.

நான் அவரை படமெடுத்தவேளை அவரின் முகத்தில் தெரிந்த சீற்றத்தை போல சீற்றத்தை வேறு எவரின் முகத்திலும் நான் பார்க்கவில்லை.

கடும் சீற்றம் கோபம் அவரது முகத்தில் தென்பட்டது. நான் அச்சத்தில் கமராவை கீழே போட்டேன். இலங்கை புலனாய்வு பிரிவினர் அந்த படத்தை பெறுவதற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதன்பின்னர் மண்டபம் அகதி முகாமிற்கு வரும் அகதிகள் மீனவர்கள் விவகாரம் குறித்து செய்தி சேகரித் திருக்கின்றேன்.

இம்முறை இந்திய தேர்தலில் தேவையில்லாமல் கச்சதீவு விவகாரம் பயன்படுத்தப்பட்டது. மீண்டும் நான் இலங்கை வந்தவேளை பிரபாகன் ஓயாத அலைகள் என்ற நடவடிக்கையை முன்னெடுத்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் ஜெயசிக்குறு நடவடிக்கையை முறியடிப்பதற்கான நடவடிக்கை அது. முல்லைத் தீவில் யுத்தம் இடம்பெற்றது.

அவ்வேளை ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்தவேளை சந்திரிகா குமாரதுங்க சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்துவதாக கூறினார் ஆனால் அவரால் சமாதானத்தை ஏற்படுத்த முடியவில்லை யுத்தத்தில் வெற்றிபெற முடியவில்லை என விமர்சித்தார்.

அதன்பின்னர் கிளிநொச்சியில் இடம்பெற்ற பிரபாகரனின் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டேன்.

பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்ற செய்தி வெளியானதும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சரத் பொன்சேகா உட்பட முக்கியமானவர் கள் சந்தித்தேன். பிரபாகரனின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதில் மர்மங்கள் சந்தேகங்கள் உள்ளன - என்றார். (அ)

## தனது...

படுகிறது.

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை தெரிவித்தமையே இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

அதேவேளை, குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னர் அவர்களது உறுப்புரிமையை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர்கள் நீக்கப்பட்டு மாவட்ட விருப்புவாக்கு பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தினேஸ்க்கு...

தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இயலும் ஸ்ரீலங்கா என்ற உடன்படிக்கை நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையில் அரசியல் கட்சிகள் உட்பட 34 தரப்புகள் கைச்சாத்திட்டன.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முன்வரும் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய தரப்புகளை ஒருங்கிணைக்கும் மற்றும் அவர்களுடன் பேச்சுகளை தினேஸ் குணவர்தன முன்னெடுத்து வருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க நடத்தும் முக்கிய மற்றும் இரகசிய சந்திப்புகளில் தினேஸ் குணவர்தனவும் பங்குபற்றி வருவதாகவும் தெரியவருகிறது. (அ)

## அரசியல்...

கட்சி உள்ளது. 2019 ஜனாதிபதி தேர்தலின்போது தேர்தல் விஞ்ஞா பனத்திலும் குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பில் பல கருத்துகள் உள்ளன. அப்பகுதிகளில் உள்ள கட்சிகளுக்கிடையில்கூட கருத்து முரண்பாடுகள் உள்ளன. எனவே, அது தொடர்பில் நாம் முடிவெடுக்கவில்லை. வடக்கு, கிழக்கு தற்போது தனித்தனி மாகாணங்களாகவே உள்ளன. இந்நிலையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாகவே 13 இருக்கின்றது. வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளும் 13 ஐ ஆரம்பத் தீர்வாக ஏற்றுள்ளன - என்றார். (அ)

## ஜனாதிபதி...

பேச்சாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்கு விசேட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது. பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், குழுவின் தலைவராக பதவி வகிக்கிறார்.

குழு எடுக்கும் தீர்மானங்களுக்கமைய, வேட்பாளர்களின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்மூலம், அச்சுறுத்தலுக்கு உள்ளான வேட்பாளர்களின் வீடுகளுக்கும், அவர்கள் வெளி இடங்களுக்கு செல்லும் போது அவர்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும்.

மேலும் ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்கேற்கும் அனைத்துக் கூட்டங்களுக்கும் விசேட பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

## கட்சி மோதல்களை...

கட்டியெழுப்புவதே தனது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

அனுராதபுரம் சல்காது மைதானத்தில் நேற்று நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" பொதுக்கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்படும் தொடர் பொதுக்கூட்டத்தின் முதலாவது பேரணி அனுராதபுரத்தில் ஆரம்பமானது. கட்சி, நிற வேறுபாடுகள் இன்றி ஏராளமான மக்கள், சல்காது மைதானத்தில் திரண்டதுடன் அவர்கள் ஜனாதிபதியை மிகவும் அன்புடன் வரவேற்றனர்.

இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியவர்கள் சஜித் பிரேமதாசவோ, அனுர திஸாநாயக்கவோ, ஹர்ஷ டி சில்வாவோ, சுனில் ஹந்துன்நெத்தியோ அல்ல என்று தெரிவித்த ஜனாதிபதி, தமது அரசாங்கம் போதியளவு உரங்களை வழங்கிய போது, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமான அறுவடையை வழங்கிய விவசாயிகளே, இந்நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றியதாக நினைவு கூர்ந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், அனுர திஸாநாயக்கவும் இன்று மேடைகளில் மக்களின் சுமைகளைப் பற்றி பேசுவது வேடிக்கையானது எனவும், உண்மையில் மக்கள் படும் துன்பம் அவர்களுக்குத் தெரிந்திருந்தால் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று, மக்களின் பிரச்னைகளுக்கு அன்றே தீர்வு வழங்கியிருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அன்று காஸ் சிலிண்டர் 6800 ரூபாவிற்கு சென்ற போது சஜித் பிரேமதாசவும் அநுர திஸாநாயக்கவும் எங்கே இருந்தார்கள் என்று கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாவிட்டால் இந்த மேடையில் வந்து அமர்ந்துகொள்ளு மாறு அழைப்புவிடுத்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"கட்சிகளை உடைப்பதற்காக நாம் இன்று ஒன்று கூடவில்லை. கட்சிகள் ஒன்றுகூடி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வந்துள்ளோம். எம்மை ஆசீர்வதிக்கவே மழையும் பெய்தது. அதனால் கட்சி பேதமின்றி சுயாதீனமாக சிலிண்டர் சின்னத்தில் போட்டிடுகிறேன்.

மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில், முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர். அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர்காலத்தைப் பாதுகாப்போம். என்னுடையதோ பிரதமருடையதோ எதிர்காலம் இங்கு பாதுகாக்கப்படாது.

கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். கேஸ் இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதையும் விற்றோம். மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹோட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினர். எதிர்கட்சித் தலைவர் ஓடிவிட்டார். அனுரவைத் தேடவே முடியவில்லை. காஸ் சிலிண்டர் விலை ரூ.4900 இற்கு கூடியபோது அனுர, சஜித் எங்கு இருந்தனர்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

அன்று உயர்வடைந்த சிலிண்டர் விலை இன்று குறைந்துள்ளது. அதனால் சிலிண்டர் சின்னத்தை ஏற்றுக்கொண்டேன். நாம் முன்னேறிச் செல்வோம். உங்கள் எதிர்காலத்தை எம்மிடம் விட்டுவிடுங்கள், சிலிண்டருக்கு வாக்களியுங்கள்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## நாமலுக்காக...

தனது உடல்நிலையைக் கருத்திற்கொண்டு மொட்டு கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்பதில்லை எனவும், ஓரிரு கூட்டங்களில் மாத்திரம் கலந்துகொள்வதெனவும் மகிந்த ராஜபக்ஷ முன்னதாக முடிவெடுத்திருந்தார்.

எனினும், மொட்டு கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ கடைசி நேரத்தில் களமிறக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து தனது மகனின் வெற்றிக்காக கூட்டங்களில் பங்கேற்கும் முடிவை மகிந்த எடுத்துள்ளார் என அறியமுடிகின்றது.

எனினும், ஓரிரு கூட்டங்களில் மட்டுமே மகிந்த உரையாற்றக்கூடும் எனவும், ஏனைய கூட்டங்களில் நாமலுக்கு ஆதரவு திரட்டி அமர்ந்திருப்பார் எனவும் தெரியவருகின்றது. (அ)

## தேர்தல்...

மதிப்பீடுகளின் படி, மாவட்ட மட்டத்தில் பிரதான பேரணி ஒன்றை முன்னெடுக்க 70 இலட்சம் ரூபாய் செலவிடப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சிறிய குழுக்களுக்கிடையிலான கூட்டத்திற்காக 2 இலட்சம் செலவிடப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக போஸ்டர், பெனர், பதாகைகள் போன்ற ஊடக மற்றும் சமூக ஊடக அறிவுறுத்தல்களுக்காகவும் பணத்தை செலவிட வேண்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக்காகவும் கடந்த தேர்தல்களை விட மேலதிகமாக செலவிடப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 1 கோடியே 74 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் அதற்கேற்ற விதத்தில் இந்த மதிப்பீடு கணிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஒரே இரவில்...

சக்தியின் கூட்டணி கட்சி ஒன்றின் உறுப்பினராவார். ஆனால், அவர் கடந்த வாரம் இடம்பெற்ற மொனராகலை மற்றும் பசறை கூட்டங்களிலும் பங்குபற்றியிருந்தார். அதேபோன்று சஜித் பிரேமதாஸவுடன் அக்கட்சி நடத்திய சந்திப்புகளிலும் கலந்துகொண்டிருந்தார்.

கடந்த வாரம் வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக விமர்சித்திருந்தார். அவர் தொடர்பில் கடந்த காலத்தில் சில விடயங்கள் அரசல் புரசலாக பேசப்பட்டன.

என்றாலும், அவரிடம் வினவிய போது, "பைத்தியமா, நான் போகமாட்டேன்" என்றார். இரவு உறங்கி விட்டு காலையில் எழுந்து பார்த்தால் ரணிலுடன் இருக்கிறார். ஆகவே, இவரது திடீர் மாற்றத்துக்கு பல நினைக்க முடியாத செயல்பாடுகள் இடம் பெற்றிருக்கும்.

இரவு எம்முடன் இருந்தவர் காலையில் ரணிலிடம் செல்ல வாய்ப்பில்லை. ஒரே இரவில் அரசியல் புரட்சிகள் இடம் பெறுவதில்லையே. ஆகவே, பாரதுரமான ஒரு விடயம் இடம்பெற்றுள்ளது.

அரசாங்கம் வெற்றி பெற எம்.பிகளை எவ்வாறு விலை கொடுத்து வாங்குகின்றனர் எனத் தெரியும். ரணில் விக்கிரமசிங்க, தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளத்தை பெற்றுத்தருவதாக உறுதியளித்துவிட்டு அதனைக்கூட பெற்றுக்கொடுக்கவில்லை.

மலையகத்துக்கு சென்று மக்களிடம் முகங்கொடுக்க முடியாத நிலையில் ரணில் உள்ளார். இவ்வாறான பின்புலத்தில் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி ஒருவர் ஒரே இரவில் ரணில் பக்கம் பல்டி அடிக்கிறார் என்றால், மலையக மக்களுக்காக அல்ல மாறாக தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ஏதும் இடம்பெற்றிருக்க கூடும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மங்களவின் சகோதரி சஜித்துடன் இணைவு

கொழும்பு, ஓக. 18

அனுபவம் வாய்ந்த, சிரேஷ்ட மற்றும் நன்மதிப்புமிக்க அரசியல்வாதிகளில் ஒருவரான மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் சகோதரியின் மகளான திருமதி சஞ்சல குணவர்தன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

மங்கள சமரவீரவின் மரணத்தின் பின்னர் அவரது குடும்பத்தில் இருந்து அரசியலுக்கு பிரவேசித்த முதல் நபராக சஞ்சல குணவர்தனவை குறிப்பிடலாம். இவ்வாறு அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டதன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக நியமித்தார். (அ)

# உலக நாடுகளுக்கு பயணம் செய்து உல்லாசம் அனுபவிக்கிறார் ரணில்!

## குற்றம் சாட்டுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 18

**ரணில் உலக நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு உல்லாசங்களை அனுபவித்து வருகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் வேட்பாளராக களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாச சத்தியவாதி மைதானத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைமுறை ரீதியாகவும் முற்போக்கு ரீதியாகவும் இந்தக் காலத்தில் மக்களுக்காக கருத்துக்களை முன்வைத்து போராட்டங்களை நடத்தியுள்ளதோடு, ஊழல் மோசடியை இல்லாது ஒழிக்கின்ற நோக்கில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

அத்துடன் திருடப்பட்ட நாட்டின் வளங்களையும் திருடப்பட்ட நாட்டின் பணத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக தனிநபர் சட்டமூலத்தை ஐக்கிய மக்கள் சக்தியே முதல் முதலில் சமர்ப்பித்துள்ளது.

நாட்டின் தற்போதைய உலக நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு உல்லாசங்களை அனுபவித்து வருகிறார். அவர் நாட்டின் தற்காலிக பாதுகாவலரே அன்றி நாட்டின் சொந்தக்காரர் அல்லர்.

ஊழலில் ஈடுபட்டவர்களிடமே நாட்டை மீண்டும் கையளிக்காமல் சரியான தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் - என்றார். (அ)

# நாட்டு எதிர்காலத்தை தீர்மானிக்காகவே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது!

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஓக. 18

நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காகவே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு இணங்கியுள்ள 34 அரசியல் கட்சிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று பத்தரமுல்லையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாதிக்கப்பட்டிருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது மீட்சிப் பெற்றுள்ளது சமுர்த்தித் திட்டங்கள் 3 மடங்காக அதிகரித்துள்ளது.

அத்துடன் தற்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதனம் அதிகரிக்கப்பட்டுள்ளது.சகல மக்களையும் இணைத்துக் கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே தனது இலக்கு - என்றார். (அ)

ஜனாதிபதித் தேர்தல்-2024

தமிழ்ப் பொதுவேட்பாளர்
மாபெரும் பொதுக் கூட்டம்


இடம்:செந்தமிழ் விளையாட்டு மைதானம்
வற்றாப்பளை முள்ளியவளை

காலம்:18.08.2024(ஞாயிற்றுக் கிழமை)
பிற்பகல் 3.00 மணி

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் அரசியலில் ஒரு திருப்பு முனையாக, வரலாற்றின் கட்டளையாகத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொது அமைப்புகளும் சேர்ந்து கௌரவ பா.அரியநேத்திரன் அவர்களைத் தமிழர் தரப்பின் பொதுவேட்பாளராக நிறுத்தியுள்ளது.

சங்குச் சின்னத்தில் போட்டியிடும் அவரை ஆதரித்து 18.08.2024(ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் 3.00 மணிக்கு,வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இப் பொதுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர்.

கட்சிகளாக அல்லாமல் தமிழ் இனமாகச் சிந்திப்போம் !
அலைகடலெனத் திரண்டு வந்து எம் பலத்தைப் பறை சாற்றுவோம் !!



“பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு”

வெல்க தமிழ்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

# முறையற்ற விதத்தில் ரணில் பிரசாரத்தில் ஈடுபடுகின்றார்!

## அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 18

தற்போதைய ஜனாதிபதி அரச அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டி மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் ஊழல் மோசடி இடம்பெற்றமை தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் தம்மிடம் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே, ஜனாதிபதியின் ஆலோசகர்களாகவும் ஆளுநர்களாகவும் உள்ளதாக அனுரகுமார திஸாநாயக்க கூறினார். (அ)

# எமது நோக்கத்தை முன்வைப்போம் எனினும் முடிவு மக்களின் கைகளில்!

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஓக. 18

“நாம் எமது நோக்கத்தை மக்களிடம் முன்வைப்போம். எனினும் மக்களே அவர்களது முடிவுகளை எடுப்பார்கள்” என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்கு பொருத்தமான பொருளாதார, சமூக மாற்றங்களை கொண்டுவர பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது. பொதுஜன பெரமுன என்பது வெற்றியடையும் அரசியல் கட்சியாகும்.

தொழில் வாய்ப்பு, கைத்தொழிலை பெருக்கி நாட்டிலுள்ள அனைவரையும் பாதுகாக்க முடியுமான பரந்த கூட்டணியாக எமது கட்சி முன்னிலையாகிறது. எமது கட்சிக்குள் மக்கள் மாறவில்லை. மக்களின் பிரதிநிதிகளே மாறுகின்றனர்.

நாம் எமது நோக்கத்தை மக்களிடம் முன்வைப்போம். மக்களே அவர்களது முடிவுகளை எடுப்பர்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் தேசிய உற்பத்திகளை எம்மால் மாத்திரமே பாதுகாக்க முடியும்.

வெற்றிக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். அரசியலில் நண்பரும் இல்லை எதிரியும் இல்லை என்பார்கள். ஆகவே எம்மை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணைவர் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# திருமணம் வரைதான் மல்யுத்தம்!

## வீராங்கனைகள் நிறைந்த செனகலின் வினோத வழக்கம்!

தமிழில் : எஸ்.மணிவண்ணன்

பெண்கள் விளையாட்டுத் துறைக்குள் செல்வதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளையும் தடைகளையும் தாண்ட வேண்டிய சூழலில், செனகல் நாட்டிலுள்ள பெண்களில் பலர் மல்யுத்த வீராங்கனைகளாக உள்ளனர்.

மேற்கு ஆப்பிரிக்காவின் செனகல் நாட்டின் காசாமான்ஸ் மாகாணத்தில் போதிய கல்வி அறிவு இல்லையென்றாலும், மல்யுத்தத்தில் பயிற்சி எடுத்து தேசிய மற்றும் சர்வதேச அளவில் பெண்கள் சிறந்த வீராங்கனைகளாக விளங்குகின்றனர்.

பெண்கள் மல்யுத்தம் செய்ய எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை என்பதால், செனகல் நாட்டின் அநேக பகுதிகளில் உள்ள பெண்கள் மல்யுத்த வீராங்கனைகளாக இருப்பதைக் காணலாம். முறைப்படி பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான வீராங்கனைகள் சர்வதேச மேடைகளில் நட்சத்திரங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். எனினும், இவர்கள் அனைவருக்குமே ஒரு நிபந்தனை உண்டு. அதுதான் திருமணம்.

மல்யுத்தம் செனகல் நாட்டின் தேசிய விளையாட்டு என்பதால், மல்யுத்தம் புரிபவர்கள் நட்சத்திரங்களாகக் கொண்டாடப்படுகின்றனர். இங்கு பொழுதுபோக்கிற்காகவும், பாரம்பரிய சிறப்பு நிகழ்ச்சிகளுக்காகவும் மல்யுத்தம் நடத்தப்படுகிறது.



செனகல் நாட்டின் வோலோஃப், ஜோலா ஆகிய இனக்குழுவைச் சேர்ந்த பெண்கள் அதிகம் மல்யுத்தம் செய்கின்றனர். மல்யுத்தமானது வோலோஃப் மொழியில் லாம்ப் என அழைக்கப்படுகிறது. வோலோஃப் செனகல் நாட்டின் தேசிய மொழி.



செனகல் நாட்டின் காசாமான்ஸ் மாகாணத்துக்குள்பட்ட பகுதியில் ஜோலா இனக் குழுவைச் சேர்ந்த பெண்கள், பாரம்பரியமாக ஆண்களுடன் மல்யுத்தம் செய்கிறார்கள். மியோம்ப் பகுதியில் சமீபத்தில் நடைபெற்ற பயிற்சியில் பங்கேற்றவர்களில் ஏராளமானோர் இளம்பெண்கள்.

ஆனால், திருமணம் வரை மட்டுமே அவர்கள் இதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அதன் பிறகு மல்யுத்தப் பயிற்சியை நிறுத்திவிட்டு பாரம்பரிய மரபுப்படி குடும்பத்தைப் பேணுவதிலேயே பெண்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இருமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவரும், 9 முறை ஆப்பிரிக்க மல்யுத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றவருமான - பயிற்சியாளர் இசபெல் சம்பூ பேசுகையில், “மல்யுத்தம் எங்கள் ரத்தத்தில் கலந்துள்ளது. எங்கள் கிராமத்தில் பெண்கள் மல்யுத்தம் புரிவார்கள். எனது தாயார் மல்யுத்த வீராங்கனை. என்னுடைய அத்தையும் மல்யுத்த வீராங்கனைதான்” என்றார் நெகிழ்ச்சியுடன்.

சம்பூவின் அத்தை அவா ஸீ பேசுகையில், “எனக்கு 80 வயதாகிறது. என்னுடைய இளமைக்காலத்தில் எனது கிராமத்தின் சாம்பியன் நான். சில ஆண்களும் என்னிடம் தோற்றதுண்டு. எனக்கு மல்யுத்தம் செய்யப் பிடிக்கும். அது என்னை வலிமையாக உணர வைக்கிறது. எனக்குத் திருமணம் நடைபெற்ற பிறகு யுத்தம் செய்வதை நிறுத்திவிட்டேன்.

திருமணத்துக்குப் பிறகு மல்யுத்தம் செய்ய அனுமதிக்காதது ஏன் என அப்போது நான் கேள்வி கேட்கவில்லை. ஆனால், என்னுடைய சகோதரனின் மகளுக்கு அப்படி இல்லை. அவளின் பணிவான நடத்தையாலும், இலக்கின் மீது இருந்த உறுதித்தன்மையாலும் பல்வேறு தடைகளைத் தாண்டி அவர் தொழில்முறை விளையாட்டு வீராங்கனையாகி இருக்கிறாள்” என்றார்.

இறைவனின் தூதுவராக கருதப்படும் ஒஸ்ஸெளயே அரசனை ஜோலா இன மக்கள் வழிபடுகின்றனர். அவரின் பெயரில் நடத்தப்படும் ஆண்டுவிழாப் போட்டி, பெண்கள் கலந்துகொள்ள ஏதுவான ஒன்று. இப்போட்டியில் இசபெல் சம்பூ பங்கேற்றதைப் பார்த்த, மல்யுத்த பயிற்சியாளர் ஒருவர் அவரை சர்வதேச அரங்கிற்கு அழைத்துச் சென்றார்.

ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டி குறித்தும், தேசிய பெண்கள் அணி குறித்தும் பயிற்சியாளர் எடுத்துரைத்தார். எனினும் அவரின் சகோதரர் ஒப்புதல் அளித்த பிறகே விளையாட ஒப்புக்கொண்டார் சம்பூ.

பள்ளிப் படிப்பைக்கூட முழுவதும் முடிக்காத சம்பூ, லண்டன் மற்றும் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று சக வீராங்கனைகளைத் திணறடித்தார். ஒரு பழமைவாத சமுதாயத்தில் இருந்து வந்த அவரை, புழுதித் தரையில் மேற்கொண்ட பயிற்சிகள் வெற்றிகரமான தொழில்முறை வீராங்கனையாக்கியது.

தாய் நிலத்திலிருந்து சர்வதேச மேடை வரையிலான தனது அனுபவங்களை நினைவுகூர்ந்த சம்பூ, “நீங்கள் பெண் மல்யுத்த வீராங்கனை என்றால், பல ஏளனங்களை சந்திக்கக்கூடும். மல்யுத்த ஆடை அணிந்து சென்றால் இது பெண்ணா? ஆணா? என கேலி பேசுவார்கள். உடலமைப்பைக் கண்டு, இனி நீ பெண்ணாகவே இருக்க முடியாது என்றும் கூறுவார்கள். இதுபோன்ற விமர்சனங்கள் மனதில் ஓடும். எனினும், நான் எனக்கு சொல்லிக்கொள்வது ஒன்றுதான். அவர்கள் எதைப் பற்றி பேசுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. இது (மல்யுத்தம்) என்னுடைய ரத்தத்தில் உள்ளது. இதுவே இன்று நான் இருக்கும் இடத்திற்கு அழைத்துவந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு என்னுடைய 30வது வயதில் ஓய்வை அறிவித்துவிட்டு, சொந்த கிராமத்துக்கே செல்ல நினைத்தேன். வேறு வேலை தேடிக்கொண்டு, குடும்ப வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் என எண்ணினேன். ஆனால், இதுவரை அது நடக்கவில்லை.

என்னுடைய எதிர்கால குடும்ப வாழ்க்கையில் கவனம் செலுத்துவதைவிட, பதக்கம் வெல்ல முடியாமல்போன தனது கனவை, பல சிறுமிகளுக்குப் பயிற்சி அளித்து அவர்களை பதக்கம் வெல்லச் செய்வதன் மூலம் நனவாக்க வேண்டும் என முடிவு செய்தேன். ஆனால் இது மிகவும் கடினமாக செயல். பெண்கள் விளையாட்டை ஊக்குவிக்கப் போதிய நிதி ஒதுக்குவதில்லை எனக் குறிப்பிட்டார்.



சம்பூவின் கிராமத்தில் உடற்பயிற்சி நிலையம் இல்லை. ஒலிம்பிக் மல்யுத்தப் பயிற்சி பெற ஏதுவான சிறப்புக் காலணிகள் இல்லை. மல்யுத்தம் புரிய ஏதுவான தரை விரிப்புகள் (mats) இல்லை. வெறும் காலில், புழுதித் தரையில் மல்யுத்தப் பயிற்சி எடுக்கின்றனர். இது எதுமே இல்லாமல் இப்பெண்களின் மல்யுத்தக் கனவு நனவாகியுள்ளது.

செனகல் தலைநகர் தாகரில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஆப்பிரிக்க இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியில், சம்பூவின் மாணவர்கள் 10 பேர் பதக்கம் வென்றுள்ளனர். அதில் 6 தங்கப் பதக்கங்கள்.

எல்லா தடைகளையும் மீறி அற்புதமாகச் செயல்பட்டதால் அவர்களுக்கு இந்தப் பதக்கங்கள் கிடைத்துள்ளன. நாட்டுக்காகவும் மல்யுத்தத்துக்காகவும் என்னை நான் (சம்பூ) அர்ப்பணித்தேன். இப்போது என்னிடம் எதுவுமே இல்லை. சொந்தமாக வீடு கூட இல்லை. அது ஒருவகையில் சிறு சோகம்தான்.

தொழில்முறை விளையாட்டு வீராங்கனையாக இருப்பது கடினம். இதற்காக அனைத்தையும் விலையாகக் கொடுக்க வேண்டியுள்ளது என்றார் சம்பூ.

தற்போது செனகல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பெற்றோர்கள் பாலின வேறுபாடின்றி தங்கள் குழந்தைகளை மல்யுத்தப் பயிற்சிக்காக சம்பூவிடம் அனுப்புகின்றனர்.

காலம் அனைத்தையும் மாற்றுகிறது. செனகல் நாட்டில் பெண்கள் விளையாட்டின் மீதுள்ள பார்வை தற்போது மாறத் தொடங்கியுள்ளது. அதற்கு உதாரணம், இரு ஆண்டுகளில் செனகல் நாட்டில் நடைபெறவுள்ள இளையோர் ஒலிம்பிக் போட்டிகள்தான்.

ஆப்பிரிக்க மண்ணில் நடைபெறவுள்ள முதல் ஒலிம்பிக் விளையாட்டாக இது அமையவுள்ளது.

தன்னை ஒலிம்பிக் விளையாட அனுமதித்த அண்ணனின் 17 வயதான மகள் மமே மாரே சம்பூ, செனகலில் நடைபெற்ற இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியில் மல்யுத்தத்தில் தங்கப் பதக்கம் வென்றிருந்தார். சர்வதேச அளவில் மல்யுத்தம் செய்ய வேண்டும் என்பதே இவரின் கனவு.

இது குறித்து அவர் பேசுகையில் “என்னுடைய அத்தையால் மல்யுத்தத்தின் மீது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. நான் விளையாட ஆரம்பித்தபோது, பெண் மல்யுத்தம் செய்வதைப் பலர் கேலி செய்தார்கள். ஆனால் நான் அதற்கு செவி சாய்க்கவில்லை. நான் என் அத்தையைப் போல இருக்க விரும்புகிறேன்” என்றார்.

காலவெள்ளத்தில் என்றாவது ஒரு நாளில் செனகலிலும் வீராங்கனைகளுக்குள்ள கட்டுப்பாடுகள் உடையும். திருமணத்துக்குப் பிறகும் மல்யுத்த மேடையேறுவார்கள், சாதனைகளைத் தொடருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

# உலக உணவில் கோதுமை முன்னிலை!



**ஆர்.எஸ். நாராயணன்**

தாவரவியல் அறிஞர்களின் கருத்துப்படி கோதுமையின் தோற்றம் கி.மு. 10,000 என்றும் மெசப்பொடேமிய நாகரிகத்திற்கு உட்பட்ட கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதி சமவெளி அடங்கிய துருக்கி, ஈராக், ஈரான், சிரியா, ஜோர்டன், பாலஸ்தீனம் பகுதிகளில் கி.மு.7000 காலகட்டத்தில் கோதுமை முறையான சாகுபடிக்கு வந்து பழமைச் சிறப்புள்ள பல நகரங்களையும் முடியர சுகளையும் தோற்றுவித்துள்ளது. கிழக் கில் ஈரான் வரை குறிப்பிட்டவர்கள், அடுத்து இந்தியா - பாகிஸ்தானை மறந்துவிட்டார்கள்.

சிந்து சமவெளி நாகரிகமும் மெசப்



பொடேமிய நாகரிகமும் சம காலத்தவை. குறிப்பாக ஹரப்பாவில் கோதுமை, பார்லி சாகுபடி நிகழ்ந்ததை எடுத்துக் காட்ட அகழ்வாராய்ச்சிக் குறிப்புகள் உண்டு. இன்றைய புள்ளிவிவரத்தை நோக்கினால், இந்தியா - பாகிஸ்தான் கோதுமை உற்பத்தி மத்தியதரைக் கடல் நாடுகளைவிட அதிகம். உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற் றுள்ளது. பாகிஸ்தான் எட்டாவது இடம்.

அண்மைக்கால ஐ.நா. உணவு விவசாய நிறுவன அறிக்கைப்படி உலக மொத்த கோதுமை உற்பத்தி 80.84 கோடி டன். உலக அரிசி உற்பத்தி 77.6 கோடி டன். அரிசியைவிட கோதுமை உண்போர் நாடுகள் அதிகம், உற்பத்தியும் வர்த்தக மதிப்பும் கூடுதல் என்பதாலும், உலக உணவில் கோதுமை முந்நிலை வகிக்கிறது.

கோதுமை உற்பத்தியில் முதலிடத்தில் சீனா உள்ளது (13.7 கோடி டன் உற்பத்தி). இரண்டாமிடத்தில் இந்தியா உள்ளது - உற்பத்தி அளவு 10.7 கோடி டன். 10.4 டன் உற்பத்தியுடன் ரஷ்யா மூன்றாமிடத்தில் உள்ளது.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலகட்டத்தில், உலக உணவு உற்பத்தி போதுமானதாக இல்லை. இந்தியா மட்டுமல்ல, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் உணவுப் பஞ்சம் தலை விரித்தாடியது. உயர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை உயர்த்துவது எப்படி என்ற கவலையில் உலகத் தலைவர்கள் ஆழ்ந்திருந்த நேரத்தில், அருமருந்தாக வந்ததுதான் பசுமைப் புரட்சி. இந்தப் பசுமைப் புரட்சியின் உலக நாயகன் நார்மன் போர்லாக் என்ற வேளாண் விஞ்ஞானி.

மெக்ஸிகோவில் உள்ள அனைத்துலக கோதுமை ஆராய்ச்சி நிலையத்தில் இவரின் 16 ஆண்டுகால ஆராய்ச்சியில் பிறந்ததுதான் குள்ளரக மெக்ஸிகன் வெள்ளை கோதுமை என்ற வீரிய ரகம். இது நாட்டு ரக கோதுமையைவிட நான்கு அல்லது ஐந்து மடங்கு விளைச்சல் தந்தது. அமெரிக்க வேளாண்மைத் துறை உத்தரவால் 1950-இல் இந்தக் குள்ள ரக கோதுமை சாகுபடி தீவிரப் பயன்பாடு திட்டமாக உருவெடுத்து, பரந்த நிலப்பரப்பில் அறிமுகமானது. படிப்படியாக கோதுமை உற்பத்தி உயர்ந்து விலை வீழ்ச்சியுற்றதால், உபரி கோதுமையைக் கடலில் கொட்டும் சூழ்நிலை வந்து, ‘உதவி’ என்ற பெயரில் அமெரிக்க கோதுமை இந்தியா வந்திறங்கியது.

கோதுமைக்கு போர்லாக் பயன்படுத்திய அதே தொழில்நுட்ப அடிப்படையில் வீரிய ரக நெல்லும் பின்னர் அறிமுகமாகி, உணவு உற்பத்தி உயர்ந்து 1970-ஆம் ஆண்டு இவருக்கு உலக அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் குள்ள ரக அதைத் தாய்க் கருவாக வைத்து புதிய புதிய வீரிய ரக கோதுமைகள் சோனா, சோனாலிகா, கல்யாண் சோனா என்ற பெயரில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் பல ஆராய்ச்சிகள் நிகழ்ந்து இன்று பற்பல ரகங்கள் பஞ்சாப், ஹரி யாணா, உத்தர பிரதேசம், மத்திய பிர தேசத்திலும் பயிராகின்றன. இந்தியாவில் 1951-52-இல் பசுமைப் புரட்சிக்கு முன் ஒட்டு மொத்தமாக 66 லட்சம் டன்னாக இருந்த கோதுமை உற்பத்தி இன்று 10.7 கோடி டன்னாகியிருக்கிறது. இந்தி யாவை உபரி நாடாக மாற்றியது இந்த பசுமைப் புரட்சி.

இந்தியாவில் அண்மை நிலவரப்படி உத்தரப்பிரதேசம். 2.68 கோடி டன் கோதுமை உற்பத்தியுடன் முதலிடத்தில் உள்ளது. மத்திய பிரதேசம் 1.76 கோடி டன், பஞ்சாப் 1.6 கோடி டன் உற்பத்தியுடன் அடுத்த இரு இடங்களில் உள் ளன.

கோதுமை உற்பத்தியில் இந்தியா முன்னிலை நாடு என்றாலும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, கனடா, ரஷ்யா, ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளன. இந்தியாவின் கோதுமை ஏற்றுமதி சுமார் 18 லட்சம் டன்கள். மைதா, ஆட்டா ஏற்றுமதி சுமார் 40 லட்சம் டன்கள். ஆனால், மேற்கூறிய உலக நாடுகளின் கோதுமை - கோதுமை மாவு ஏற்றுமதி சுமார் 14 கோடி டன்கள். மேற்கத்திய முன்னிலை நாடுகள் ரொட்டித் தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப மாவாக பெரும்பாலும் ஏற்றுமதி செய்கிறார்கள்.

கோதுமையை அடிப்படையாக வைத்து ரோலர் மாவு ஆலைகள் வளர்ந்து உணவு வர்த்தகத்தை வளர்க்கின்றன. மைதா, ஆட்டா, ரவா உற்பத்தியை ரோலர் மாவு ஆலைகள் செய்கின்றன. மைதா, ஆட்டாவை நம்பி பேக்கரி அல்லது ரொட்டித் தொழில் நிறுவனங்களும் பிஸ்கட் நிறுவனங்களும் இயங்குகின்றன.

உலகில் பெரும்பாலான மக்களுக்கு கோதுமை பிரதான உணவு. மாவாக மாற்றித்தான் சமைக்க முடியும். கோதுமை மாவில் தண்ணீர் ஊற்றி கெட்டியாகப் பிசைந்து உருட்டி வைத்தால் இழுத்து வளைக்கவரும், இதை ‘டோ’ என்பர். சப்பாத்தி செய்வதானாலும் பரோட்டா செய்வதானாலும் தந்தூரி ரொட்டி செய்வதானாலும் பேக்கரியில் பாண்வகைகள் செய்வதானாலும் கோதுமை மாவை ‘டோ’வாக்க வேண்டும். சாதாரணமாக நம் வீடுகளில் கோதுமை மைவைப் பிசைந்து 4.5 மணி நேரம் சற்று புளிக்க வைத்து ‘டோ’வை சிறு உருண்டைகளாக உருட்டி வட்டமாக அப்பளம் போல் இட்டு பூரி, சப்பாத்தி செய்வார்கள்.

கோதுமையில் 72 வீதம் மாவுப் பொருளும் 13 வீதம் புரதமும் உள்ளது. நார்ப் பொருள் 10 வீதம், கொழுப்பு 2 வீதம் தவிர மக்னீசியம், கால்சியம், வைட்டமின் பி6, இரும்புச் சத்தும் உண்டு அரிசியைவிட கோதுமையில் புரதச் சத்து கூடுதல் என்பதால், அரிசிச் சோறைவிட கோதுமை உணவு சத்தானது.

இந்தப் புரதத்தில் உள்ள குளூட்டன் ஆரோக்கியத்துக்கு உகந்தது அல்ல என்ற பிரசாரம் இருந்தாலும், தமிழ்நாடு மாநிலத் தேவைக்குரிய பொது விநியோகத்திற்கு மாதம் 15,000 டன்னும், தமிழ்நாடு உருட்டு மாவு ஆலைத் தேவைக்கு மாதம் 1 லட்சம் டன் வரை கோதுமை வருகிறது. மைதாவில் செய்யப்படும் பரோட்டா தமிழ்நாட்டில் முக்கிய உணவாக மாறிவிட்டது.

குளூட்டன் விஷமல்ல, அது ஒரு பசையான புரதம், நன்கு பிசைந்து மாவை இழுத்து இஷ்டம்போல் விரித்து இட உதவுகிறது. இது மாவுப் பொருளுடன் கலந்துள்ளது. கோதுமை மாவில் செய்யப்படும் சாப்பாத்தியைவிட மைதாவில் செய்யப்படும் பரோட்டா, ‘நான்’ ஆகியவற்றில் குளூட்டன் சிறிது கூட இருக்கும். பீட்சாவில் நிறையவே குளூட்டன் இருக்கும். ஜீரணக் கோளாறு உள்ளவர்கள், குடல்புண் உள்ளவர்கள் தவிர்க்கலாம். மாந்தம் ஏற்படலாம். உடல் உழைத்து வேலை செய்வோருக்கு ஒன்றும் ஆகாது. செரிமானம் ஆகிவிடும்.

ரொட்டி மலர்ந்து மென்மையாக்க பேக்கிங் பவுடர் பயன் உண்டு. இதில் பைகார்ப்பனேட், கார்பனேட் உண்டு. பேக்கிங் சோடா, உப்பு, ஈஸ்ட், சர்க்கரை, லெக்டின் அஸ்கார்ப்பிக் அமிலம் பவுடர் வடிவில் இவையெல்லாம் சேர்ந்தால்தான் ரொட்டி, பாண் தயாரிக்கலாம். அதேசமயம், விஷப் பொருளான பொட்டாசியம் புரோமேட், பொட்டாசியம் அயோடேட் சேர்க்கப்பட்டதைக் கண்டுபிடித்தனர். இவை தடை செய்யப்பட்டவை. புற்றுநோய்க் காரணிகளாகும்.

மைதா தயாரிக்கும்போது மாவை வெள்ளையாக்க அல்லோக்சான் என்ற ரசாயனம் அளவுடன் பயனாகிறது. இதனால் கணையம் பாதிக்கப்படலாம் என்ற கருத்து உண்டு. அல்லோக்சான் பாதகமானது என்பதற்கு வலுவான ஆதாரம் இல்லை என்ற கருத்தும் உண்டு. மைதாவில் தயாராகும் பிஸ்கட், பரோட்டா சாப்பிடுவதை நிறுத்த முடியாது. மெதில் ஆல்கஹாலையே ஜீரணிக்கக் கூடியவர்களுக்கு புரோமேட், அல்லோக்சான் எல்லாம் தூசு.

